# மனத்திற் குறுத்தும்

# மதிவிளக்கம்.

(லோகோபகாரி பிரசுரம்)

[illegible] டாக்டர்
உ. வே. சாமி[illegible] நூல் நிலைய
அடைய[illegible]-20.



GF

வித்யாவதாரகம்

பொன்னுவேல் பிள்ளை யவர்களால்

எழுதப்பட்டது.

E6

Copy-right [அணா 4.

XII, 12

"லோகோபகாரி" பிரசுரம்.

மனத்திற்குறுக்கு

# மதிவிளக்கம்.

---

இது
சிதம்பரநாதர்
பிள்ளை - பொன்னுவேற்பிள்ளையால்
எழுதப்பட்டு,
சென்னை
ஹிந்து ப்ரொப்ரைடரி ஹைஸ்கூல்
தமிழ்ப் பண்டிதர்
ஸ்ரீமத் - கோ. வடிவேலு செட்டியார்
அவர்களால்
பார்வையிடப்பட்டு,

சென்னை, கோமளேச்வரன்பேட்டை,
சச்சிதாநந்த அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1916.

விலை] [அணா 4.



[illegible]

# முன்னுரை.

சென்னை இந்து தியலாஜிகல் ஐஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் கோமளேசுவரன் பேட்டை, ஸ்ரீமத் கோ. வடிவேலு செட்டியாரவர்கள் பத்திராதிபரும், பத்திரிகாசிரியருமாக விருந்து நடத்திவரும் "லோகோபகாரி" "சக்கிரவர்த்தினி" என்னும் பத்திரிகைகளில் ஒன்றான "லோகோபகாரி"யில் ஏதாமொரு விஷயத்தைப்பற்றி எழுதலாமென் றியோசித்தபோது.

உலகவாசிக ளொவ்வொருவரும் தம்மாற் கூடுமானவரையில் இகபர மிரண்டினுக்கும் வேண்டிய சாதனங்களிற் பழகினாலல்லது அவ்வவ் வுலகவின்பங்களை அடைய முடியாதென்பதும், நல்லாசிரியனை யடைந்து ஞானோபதேசம் பெற்று சாதனத்திற் சதாபழகி யுண்மையுணர்ந்தார் மாத்திரமே பரலோக சாதனங்களைக் கவனிப்பரென்றும், மூடன் முதல் முமுட்சு வரையில் இகலோக சாதனங்களி லடங்கியவைகளில், குடும்பம், வர்த்தகம், கைத்தொழில், நட்பு, முதலானவைகளை உட்கிடையாய்க்கொண்ட இலௌகிகம் முக்கியமான தென்பதும், இவ்வித இலௌகிக வியவகாரமாகிய உலக

நடைகளை கவனித்து நடப்பவர்களே பழிபாவங்களினின்று நீங்கி புண்ணியத்தையும், புகழையும் அடைவார்களென்பதும், ஒருவாறு என் சிற்றறிவிற் கெட்டியதால், அத்தகைய விஷயங்களிற் சிலவற்றை "மனத்திற்குறுத்து மதிவிளக்கம்" என்னுந் தலைப்பின் கீழ், கால நேர்ந்தபோதெல்லாம் எழுதிக்கொண்டு வரலானேன், எழுதிவருங்கால் இது புத்தகமாகுமென்றாவது, ஆக்குவோமென்றாவது கிஞ்சித்தும் எண்ணினே னில்லையாயினும், இன்னுஞ் சில ஆப்தர்கள் இப்பத்திரிகையில் எழுதிக்கொண்டு வந்ததில் இன்னின்ன விஷயங்களை "புத்தகமாய் வெளியிடுமாறு வேண்டுகின்றனம்" என திருப்புரம்பியம் போஸ்மாஸ்டர் ஸ்ரீமத் வி. சாட்சிநாதம் அவர்கள் 26-1-14 பத்திரிகை 10-ம்பக்கத்தில் தங்கருத்தை வெளியிட்ட பிறகு என்னண்பர்களிற் சிலரும் அப்படிச் செய்வது நன்றேயெனக் கூறலும் இது யாரால் நிறைவேறுமென்று யோசித்து குளத்தூர், செம்பியம், இவ்விரு கிராம மிராசுதாரரும், பரோபகாரியுமான ம-௱-௱-ஸ்ரீ மா. பொன்னுசாமி கிராமணியா ரவர்களிடம் தெரிவித்தவுடன் அவர்கள் புத்தகமாக்க வொத்துக்கொண்டதும், ஷை செட்டியாரவர்களால் பார்வையிடப்பட்டு அச்சிடப்பட்டது.

இது புத்தகமாவதற்குத் தூண்டுகோலா யிருந்த ஸ்ரீமத் வி. சாட்சிநாதம்பிள்ளை அவர்கட்கும், பொருளுதவிசெய்து புத்தகமாக்கிய ஸ்ரீமத் கிராமணியாரவர்கட்கும், சிரமம் பாராட்டாது பிழைபார்த்துக் கொடுத்த ஸ்ரீமத் செட்டியா ரவர்கட்கும், என் புல்லுரைநிறைந்த புத்தகத் தை கல்வியிற்றேர்ந்த வல்லவரேந்த தத்தம் நல்லுரையான அபிப்பிராயங்களளித்த மேதாவி யர்கட்கும், செவ்வனே அச்சிட்டுக்கொடுத்த சச்சிதாநந்த அச்சியந்திர சாலையாரவாகட்கும், என் மனமார்ந்த வந்தனம் தினந்தினந் தருங் கடமையுடையே னாயினேன். எல்லாப் பிழை யும் நல்லோர் பொறுக்க.

பி. போ.

(1916)
மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலை
அண்ணாமலை... சென்னை-20.

# சிறப்புப் பாயிரம்.

## ஸ்ரீமாந் வ. உ. சிதம்பரம்பிள்ளை

### அவர்களியற்றிய

### ஆசிரியப்பா.

ஆதி பகவன் ஓதியது நீதி.
நீதி தரும்பெரும் ஊதியம் மாவலம்.
மாவலம் சேர்ந்தது நாவலம் தீவு.
நாவலம் தீவில் கோவல னெடுதிசை.
மாரதம் ஊர்ந்தது பாரத நாடே.
பாரத நாட்டில் சூரர்கள் வாழ்ந்தது.
செந்தமிழ் வழங்கும் நந்தமிழ் நாடு.
நந்தமிழ் நாட்டில் வந்தபுல வர்க்கெலாம்
நிதியும் சீரும் மதியொடு வழங்கி
அதிநலம் புரிந்துமெய்ப் பதியினை யுணர்ந்தோன்
குளத்தொடும்பலவகைக்களத்தொடும்அமைந்து
வளத்தினில் நிறைந்த குளத்தூர் செம்பியம்
என்னும் நகர்களின் மன்ன னாகி
நன்னீர் நதிகளும் அன்னமார் வயல்களும்
மாடமும் பலவகைக் கூடமும் நிரம்பிய
கோடம் பாக்கத் தாடம் பரத்தொடு
தன்னயம் இலாது நன்னயம் புரிந்து
மன்னிவாழ் கின்ற மா-பொன்னுசாமிக்
கிராமணி யென்னத் தராதலஞ் சொல்ல
வராநின் றவர்க்கெலாந் தராநின்ற வள்ளல்.
அன்னவ னளித்த நன்னிதி யுதவியால்

இன்னலம் பெற்ற நன்னூல் பலவினுஞ்
சிறந்தது நலமெல்லாம் செறிந்து விளங்கி
அறந்திகழ் பொருளொடு திறம்பல சாற்றும்
மொழிகள் நிரம்பிய கழிபெரும் நூல்களின்
விழியினை யொத்த வழிநூல் என்னத்
தமிழுல கெங்கணும் அமிழ்தென நிலவும்
தமிழுரை நடையில் இமிழுற வரைந்திப்
படி தனில் புகழின் வடிவமும் பெற்ற
வடிவேல் செட்டியார் வடிவு படுத்த
ஆரிய மக்கள் தேரி யுணர
ஊரி"லோ கோப காரி"யில் நடந்து
தனத்தினர் களுக்கும் வனத்தினர் களுக்கும்
இனத்தினை நிகர்த்து "மனத்திற் குறுத்து
மதிவிளக்கம்" மெனும் அதிநலம் நிறைந்த
பதியினை யுணர்த்தும் கதியுயர் நூலே.
இந்நூல் ஆக்கியோன் நந்நூல் உரைக்குஞ்
செந்நெறி நடந்து முந்நீர் உலகில்
பிரம்பை நகருள் உரம்பெறப் பிறந்து
வரம்பினுள் நின்று பரம்பொருள் உணர்ந்து
செப்பமும் வாய்மையும் ஒப்பில் புலமையும்
ஒப்புரவும் நிறைந்த சுப்ப ராய
வேளிங் கியற்றிய நீளருந் தவத்தால்
வேளென வுதித்து மீளிசை தாபுரி
முனிசாமி முதலியார் இனிமையோ டுரைத்த
கனிநிகர் நூலெல்லாம் நனியினி துணர்ந்துளம்
உன்னியாங் கொழுகி நன்னலம் பெற்றிவண்
மன்னிவாழ் புலவன் பொன்னுவேற் பிள்ளையே.

திருச்சிற்றம்பலம்.

# அருந்தமிழ் வல்லார் அபிப்பிராயங்கள்.

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

சிவஸ்ரீ-கலியாணசுந்தர யதீந்திரர்

"சித்தாந்தம்" பத்திராசிரியர், அவர்களியற்றிய

பன்னிருசீர் விருத்தம்.

மனம்போன போக்கெல்லாம் போகவேண்
டாமென்ன வழங்கு நீதி
வகுத்தஞா னிகளினனுபவந்தன்னை
நனிசூழ்ந்து மதிப்புற் றந்த
மனமதனை ஞயம்படவே யுரைத்துத்தன்
வயமாக்கும் வகையை யோர்ந்து
மாண்புறுஞா னச்சாத்திரத்திலகும்
பலதருமம் வகுத்துக்காட்டி
மனத்திற்கு ணத்துமதிவிளக்கமென
வொருநூலை மகிதலத்து
வாழுஞ்சன் மார்க்கரெலாமனங்கூம்பி
யேவதிய மகிழ்விற் சொற்றான்
மன்றுளுய்மை யினிலொழுகுஞ் சாந்தகுண
சீலனெனும் வாய்மை யாளன்
மாபிரம்பை யூர்மேவும் பொன்னுவே
லுவலனு மகிபன்றானே.

## "ஞானபாநு" பத்திராதிபர்

## பிரம்மஸ்ரீ, சுப்பிரமணிய சிவம்.

### அவர்களெழுதிய கடிதம்.

தங்களுடைய "மனத்திற்குறுத்து மதி விளக்கம்" நமது ஜனசமுகத்திற்கு அரியபெரிய புத்திமதிகளைப் புகட்டி அனைவரையும் நல்வழியில் செலுத்தும் என்பதில் சந்தேகம் என்ன? அது பகுதிபகுதியாக "லோகோபகாரி"யில் வெளியாய்க்கொண்டு வந்தபொழுது, "லோகோபகாரி"ப் பத்திரிகை வந்துவிட்டால் நான் எந்தவேலையி லிருந்தாலும் அந்த வேலையை யப்படியே நிறுத்தி விட்டு முன்னர் தங்களுடைய "மனத்திற்குறுத்து மதிவிளக்க"த்தைப் படித்துவிட்டுத்தான் வேறு வேலை பார்ப்பது வழக்கம். ஆதலால் அது எம்பட்டிற்கு எனக்கு ருசியாயிருந்திருக்க வேண்டுமென்று தாங்களே யறிந்துகொள்ளலாம். இன்னும் இத்தகைய நூல்கள் பலவெழுதி இம்மையிலும் மறுமையிலும் தாங்கள் இன்பமடையுமாறு எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றனன்.

## பிரம்மஸ்ரீ வரகவி-திரு-அ-சுப்பிரமணிய பாரதியாரவர்கள் இயற்றிய வெண்பா.

மனத்திற் குறுத்து மதிவிளக்க மென்னும்
இனித்ததமிழ் நூலினிதா யீந்தான்—பனித்தமதிப்
பிள்ளையணி வேணியனைப் பேசுமுயர் பொன்னுவேற்
பிள்ளையுளத் தன்புமிகப் பெற்று.

## திருப்புறம்பியம் போஸ்ட்மாஸ்டர் ஸ்ரீமான் வி. சாட்சிநாதம் பிள்ளையவர்கள் எழுதியது.

நமது நண்பர் ஸ்ரீமான் பொன்னுவேற் பிள்ளை அவர்களால் மிக்க மதி நுட்பத்தோடும் ஆராய்ச்சியோடும் பல நூற்களின் கருத்துக்களை ஒருங்கு திரட்டி வரையப்பெற்றுள்ள "மனத்திற் குறுத்து மதிவிளக்க மென்னும்" அரிய நூலைப் பார்வையிட்டேன். அதைப் படிப்பதால் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் மனக்கோட்டந் தவிர்ந்து அறிவு விசாலித்து நல்லொழுக்கத்தைப் பெரிதும் அடைந்து பயனெய்துவார்களென்பது திண்ணம்.

இவ்வரிய முயற்சியைக் கைக்கொண்ட பிள்ளையவர்களுக்குத் தமிழ் நாட்டார் மிக்க கடமைப்பட்டுள்ளார்.

திருத்துருத்தி இந்திரபீடம்

ஸ்ரீ கரபாத்திர சுவாமிகளாதீனம்

ஈசூர் - ஸ்ரீ - சச்சிதாநந்தசுவாமிகள்

சிஷ்யப்ரசிஷ்யரும்

39-வது பட்டாளம் சுபேதார் மேஜராயிருந்த

ஆத்மஞானி

ஸ்ரீ ஐயாக்கண்ணு சுவாமிகள் சிஷ்யரும்

இந்நூலாசிரியரின் போஷகருமான

ஸ்ரீமாந் தே. அ. சாமிகுப்புசாமி யவர்கள்

எழுதியது.

என்னன்பிற்குரியவரும், அறிவிற் சிறந்தவரும், ஆன்றோர்களகமகிழ வனுதினமு மடிபணிபவரும், நல்லாரிடத்தில் நடுநிலையுண்மையை நன்குணர்ந்தவரும், கல்விக்களஞ்சிய கண்ணியரும், யுக்தி பொக்கிஷ வுத்தமரும், வேதாந்த சித்தாந்த விசாரணையில் துல்லியரும், இலக்கண விலக்கிய வல்லுனரும் அன்பர்களகமகிழ ஆசுகவி யெழுது மாற்றலுடையவரும், மகான்கள் மனமுவந்தளித்த செந்தமிழ்ப் புலவரென்னுஞ் சிறப்புப்பெய ருடையவருமாகிய எனது செல்வச் சிரஞ்சீவி பிரம்மை பொன்னுவேற்பிள்ளை யவர்கள் மனத்திற்குறுத்து மதிவிளக்கமென்னு நூலை யியற்றியதற்கு யானென்னைக்கைமாறு செய்யவல்லேன். இந்நூலை யார்பார்த்த

போதினும் மனத்தினது சொரூப மிப்படிப் பட்டதென்று நன்குணர்ந்து, தியமயக்கத்தினின்றும் நீங்கி சின்மய வகண்டாகார சிற்சொரூப சைதன்ய வடிவமாவார்களென்று என் குருநாதன் திருவடிசாக்ஷியாய்ச் சொல்லுகின்றேன்.

இன்னூலாசிரியர் இதுபோன்ற அரிய பெரிய நூல்களை யனந்தமாகத் திருவருட்டுணையாற் செய்து உலோகோபகாரமாக வெளிப்படுத்துவாராக.

இன்னூலும், இன்னூலாசிரியரும், இன்னூலைக் கண்ணுறுபவரும், தூய்மனமுற்று வாழ்வார்களாக.

---

புராணிகர் சரசவாணி

ஸ்ரீமாந் கா. இ. சிதம்பரசாமி பாண்டியரவர்கள்

எழுதியது.

சைவஸ்ரீ, ம. தி. பானுகவி சுவாமி முதலியவர்கள் பால் இலக்கண விலக்கியம் பயின்றவரும், ஸ்ரீமத் சுவாமி குப்புசுவாமி யென்னும் மகானிடம் ஞானோபதேசம் பெற்றவரும் ஒரு மகா சபையின்கண் வேதாந்த வித்வத் சிரோமணி ஸ்ரீமத் கோ. வடிவேல் செட்டியா ரவர்

களால் "செந்தமிழ்ப் புலவர்" என விதக்கப் பெற்றவரும், அடியேனுக்குச் செய்யு ளிலக் கணம் கற்பித்த ஆசிரியராகிய ஸ்ரீமான் - பிரம்பை பொன்னுவேற் பிள்ளையவர்கள் சுருதி, யுக்தி, அனுபவங்கட்கியைந்த நீதி விடயங்களைப் பாலர்முதல் விருத்த ரீறாகக் கற்ற வரும், மற்றவரும் எளிதில் உணரும்படிச் சுருக்கமாகவும், விளக்கமாகவும் இயைத்து 'மனத்திற் குறுத்து மதிவிளக்கம்" என்னும், பெயரால் இயற்றிப் புத்தகரூபமாக வெளிப் படுத்தினார்கள்; இப்புத்தகம் இல்லறவாசிக ளியாவரும் அத்தியாவசியம் வாசிக்கவேண்டிய புத்தகங்களினு ளொன்றாம்; வாசிக்கின் தாய், தந்தை, மாமன், மாமி, மனைவி, மக்கள், நட்பினர், குரு, சீடன் முதலியவர்களிடம் விரோதமின்றி நடந்து இகசுகத்தைப் பெறு வார்களென்பது திண்ணம். சுபம்.

---

உபாத்தியாயர்
ஸ்ரீமான் - சை. முனிசாமி முதலியாரவர்கள்
மாணவர்
பிரம்பை. பெ. முத்துசாமி உபாத்தியாயரவர்கள்
எழுதியது.

சிறந்த நாவல்கள் முதலிய நூல்களை ஒரு கால் படித்து முடிந்தபின் மறுகால் படிக்க

அவாவெழினும் படிக்க மனமெழுவ தில்லை.
எனது ஒருசாலை மாணவர் பிரம்பை-பொன்னு
வேற்பிள்ளையவர்கள் சுருதி, யுக்தி, அனுபவங்
கட் கேற்றவாறு இகலோக சாதன வகுப்பிற்
சேர்ந்த பல விடயங்களை என்போல்வாரும்
எளிதி னுணரவியற்றிய "மனத்திற்குறுத்து
மதிவிளக்கம்" என்னும் நூலை ஒருகாலன்றிப்
பலகாலு மோயாதோதினும் சமயம் வாய்க்கும்
போதெல்லாம் இவ்விளக்கமே நம்மை இடை
விடாது படிக்கும்படியான பெரும் வேலையைக்
கொடுப்பதோடு இந்நூற்பெயருக் கேற்ப நம
மறிவையும் விளக்குமென்பதற்கோ ரையமின்
றாம்.

இந்நூலை, கற்றோரும், மற்றோரும் கைக்
கொள்வதன்றி, பாடசாலை மாணவர்கட்கும்
பாடமாகவைத்துப் படிப்பிப்பதாலும் பயனுண்
டெனக் காண்கின்றது.

உ

சிவமயம்.

சைவப்பிரசாரகச் செந்தமிழ்ப்புலவர்

**வித்தியாவதாரணம்**

**ஸ்ரீமத். பிரம்பை-பொன்னுவேற்பிள்ளையவர்கள்மீது**

சைவசித்தாந்த மகாசமாஜ அக்கிராசனரும்
சென்னை பெப்கண்டரந்தானசபை காரியதரிசியும்
செம்பியம் ஆனரரி மாஜிஸ்டிரேட்டுமாகிய

**பண்டிதரத்தினம்.**

தகஸ்ரீ புழலை-திருநாவுக்கரசுமுதலியாரவர்கள்

வியந்தருளிய

## எழுசீர் விருத்தம்.

பாருலாஞ் செந்தமிழ்ப் புலவனென் றுமைசெய்
பாவலப் பண்புவாய்ந் திலகுந்
சீருலா மினிய மொழியமு தாகத்
தெளிவுறப் பன்னயந் தொனிக்கப்
பேருலாம் படியிம் மாநிலந் தன்னிற்
பிரபல பிரசங்க முறையாய்
நாருலாம் படிச்செய் நாவல னென்ன
நலமிகும் பிரம்பையில் வந்தான் (க)

கற்றவர் நிறைந்த பெருஞ்சபை தன்னிற்
கவின்பெற யாவரும் வியக்கச்
சொற்றரும் வித்தி யாவதா ணப்பேர்
துலங்கிடும் பொன்னுவேற் புனிதன்
பெற்றநற் குணங்க ளுயரிய தகைமை
பேசிடற் குரியதோர் சாட்சி
மற்றுநம் மனத்திற் குறத்துமகிழ் விளக்க
வசனமே புரைத்திடுந் தானே. (௨)

உ

சிவமயம்.

பிரம்பூர் - செம்பியம் யூனியன் சேர்மேன்

## ஸ்ரீமத் - A. தில்லைநாயகம் பிள்ளையவர்கள், B.A.

(RETIRED 1ST GRADE SUB REGISTRAR.)

நண்பர் வித்தியாவதானம் - பிரம்மை-பொன்னுவேற்பிள்ளையவர்கள் மதி நுட்பமாகவும் லோகோபகாரமாகவும்இயற்றி வெளிப்படுத்திய "மனத்திற்குறுத்து மதி விளக்கம்" என்னும் இந்நூலானது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாப் பெரும்பயனைத் தரத்தக்கதாய் அனைவருக்கும் எளிதிலுணருமாறு வசனநடையில் வெகுநயமாக நூற்றைம்பத்தாறு பகுதிகளாக வகுத்துக் கூறியுள்ளயாவும் நற்புத்தி புகட்டுவதோடு படிக்கப்படிக்க மனவுல்லாசத்தைப் பெரிதுமுண்டாக்குகிறது. இதுவிஷயமாக பிள்ளையவர்கள் எடுத்துக்கொண்ட பிரயாசைக்காக என்றும் நன்றியறிதலுடையேன் என்பதிலாட்சேபமில்லை.

பிரம்பூர்,<br>27-3-17. } A. தில்லைநாயகம் பிள்ளை.

---

ஸ்ரீமான்-C. இருசப்ப முதலியாரவர்கள்

(RETIRED 1ST GRADE SUB ASSISTANT SURGEON.)

குமாரர்

செம்பியம் டிவிஷன் லோகல்பண்டு ஓவர்சீயர்

## ஸ்ரீமத்-செ. சிதம்பர முதலியாரவர்கள்.

நீதிநூல்களின் சாராம்சங்களை யெல்லாம் ஒருங்கே திரட்டி "மனத்திற்குறுத்துமதிவிளக்கம்" என்னும் நூலியற்றித்தந்த எனது நண்பர் வித்தியாவதானம், பிரம்மை - பொன்னுவேற்பிள்ளையவர்கட்கு என்றும் மறவா நன்றிசெலுத்தக் கடமைப்பட்டவனுகிறேன்.

செம்பியம்,<br>27-3.17. } செ. சிதம்பரமுதலியார்.



# மனத்திற் குறுத்து மதிவிளக்கம்.

மனத்திற் குறுத்து மதிவிளக் கஞ்சொல
கனத்துதிக் கையுடைக் கரிகழற் காப்பே.

நன்மை தீமைக்கெலாம் நாயகமா யொளிர்
பொன்னினு மரியதாய்ப் பொலிந்திடு மனமே!

எண்பத்துநான்கு லக்ஷம் யோனி பேதங்களுள் எய்தற்கரிய மானிடப் பிறவியைத்தந்தும், அப்பிறப்பினு மல்லலாம் பெண்ணுருவைத் தராது ஆணுருவைக் கொடுத்தும், அவ்வாணுருவினும் உடற்குற்ற மெட்டனுளொன்றுக்கு மாளாக்காது உன்னத அவயவங்களை யீந்தும், அவ்வளவோடு நில்லாது மற்றத் தேயங்களி லல்லாமல் தேவ பாஷையாகிய சம்ஸ்கிருதம் தமிழ் முதலியன வழங்கி வருவதும், ஆன்மாக்களுய்யும் பொருட்டு நந்தேய்

வஞ் சகளவடிவத்தோ டெழுந்தருளியிருக்குந் திருக்கோயில்க ணிறைந்துள்ளதுமான இந்து தேசத்தைப் பிறப்பிடமாகவும், அவ்வளவோ டன்றி உன்வினைக்கேற்றபடி கல்வி, அறிவு, செல்வ முதலியவைகளுள் உன்னிலுந் தாழ்ந்த நிலைமையை யேற்றுச் சதா தேகமனக் கஷ்டங் களை யநுபவிக்கும் பாமரவேழைகளின் சமுகத் தில் உன்னைவள்ளலா யிருக்கக் கிருபை பாலித் தும், ஆஸ்திக நாஸ்திக மென்னு மிரண்டு மதங் களுள் ஆஸ்திக மதத்திற் கட்டுப்படுத்தும் அரும்பெரும்புத்தியை யநுக்கிரகஞ் செய்தும், இரட்சித்து வரும் பரமேசுவரனது பங்கயத் தாட்களை நெஞ்சே! நீயிடை விடாது பணி வாய், பணிவாய். 1

அசத்துக்களை யெல்லாஞ் சத்தென நம்பி விழலுக்கிறைக்கு நீரென வீணுக் குழைத்து மருளுமயலானது கற்ற கல்வியாலும், கற்ற படி நின்ற நீதிபாசார விரதங்களாலும், நீங் காம லவஸ்தைப்படுந் தருணத்தி லவைகளின் பயனுக மானிடவடிவந்தாங்கிக் குருமூர்த்தமா யெழுந்தருளி யுபதேசமென்னு மொளியால் மருளென்னு மிருளினின்று நீக்கி உண்மை யென்னு மொளியி லெக்காலு மிருந்து வாழச் செய்த பரமேசுவரனது திருவடிகளிற் சிந் தனையைச் சிந்தாது செலுத்துவாய், செலுத்து வாய். 2

சீலம் பக்தி முதலிய வைகளிற் சிறிது மாறாது ஐம்பொறிகளையும் செல்லா நெறிகளில் செல்ல விடாது கண்டவர் கல்லொத்த மனதை யும் அழற்படு மிழுதெனக் கரைந்துருகக்கொ ண்ட கோலத்திற் குகந்தபடி குணமுஞ் சிற ந்து விளங்கும் உத்தமோத்தம பக்தசிகாமணி களின் உன்னத விணையடிகளை யுன்னுளத் திரு த்துவாய், இருத்துவாய். 3

நீ எப்படிப்பட்ட சௌக்கியா சௌக்கிய த்தி லிருப்பினும் கூட்டத்தி லிருப்பினும், உன்னுபாசனு மூர்த்தத்திலே யாவது, குரு வுரைத்த வுபதேச வார்த்தையி லாவது லட்சி யம் வைத்திரு, வைத்திரு. 4

ஆசாரம், விரதம், சந்தியாவந்தன முத லியவற்றை உன் இலௌகிகத்திற் கேற்றபடி பெருக்கியுஞ் சுருக்கியுஞ் செய்து முடித்தல் நலமாம், நலமாம். 5

பிறர்கூறும் ஆசை வார்த்தையா லகமகிழ் ந்து பேராசைகொண்டு அநுபவமில்லாத காரி யத்திற் றலையிட்டு அதனை முடிக்காது, முடி வில் அவமானத்தைக் கூலியாகப் பெற்று வருந்தாதே, வருந்தாதே. 6

உயர்ந்தோ ராயினுந். தாழ்ந்தோ ராயி னும், சுருதி, யுக்தி, அநுபவத்திற் கிசைந்த

அரிய விஷயங்களைக் கூறுவாராயின், அவற்றை மாணிக்க மென்ன வறிவாகிய முன்றானையில் முடிந்து ஞாபக மென்னும் காத்தா லடிக்கடி யவிழ்த்துப் பார்வையிடு, பார்வையிடு. 7

கண்ணுக் கழகான வேடிக்கை, விளையாட்டு, வீண்பாட்டுகளிற் பூரணஞாபகத்தைச் செலுத்தாதிரு, செலுத்தாதிரு. 8

அதிகாரி, தாய், தந்தை, குரு, எஜமானன், மூத்தோன் என்னும் இவர்கள் உனக்கிட்ட கட்டளையை வருத்தத்திற் கஞ்சாது, சோம்பலின்றிச் செய்து முடித்து, அவர்கட்குத் திருப்தியை யுண்டாக்கு. அஃது உனக்குள்ள படியே செய்ய முடியாத தாயின் வணக்க விநய வார்த்தைகளால் உன்னெண்ணத்தைத் தெளிவாய்த் தெரிவிப்பாய், தெரிவிப்பாய். 9

அதிகாரி, குரு, எஜமானன், கல்வி செல்வங்களில் உன்னின் மேம்பட்டவர்கள், உன்னை யாதாவதொரு விஷயத்தில் மதித்துத் தங்களோ டிருக்கச் செய்து ஒரு விஷயத்தை (நியாயத்தை) ப் பேசும்போது, நீ முன் பின் பாராது நியாயத்துள்ள குண குற்றங்களை அவர்க ளுத்திரவன்றி முற்பட்டுக் கூற முயலாதே, முயலாதே. 10

மேற்கண்ட அதிகாரி முதலானவர்கள் நம் இனத்தவ ரென்றும், நமக்கிளையவ ரென்

றும், பழைய சிநேக ரென்றும், இவர்களால் நன்கு அபிமானிக்கப்பட்டோ மென்றும், இவர்களைப்போல நீ நடித்தலை விட்டு, அக்கினியினிடத்து அளவோ டிருந்து தன் குளிரைப் போக்கிக்கொள்வானைப் போல நீ யிவர்கள்பாலொழுகி நின் கடமையைச் செலுத்துவாய், செலுத்துவாய். 11

இவர்களோடாவது, இவர்களி லொருவர் வீட்டிலாவது, நீ சமமாக விருந்து போஜனஞ் செய்யும்போதும், உன் வீட்டு விருந்தாளிகள் பசியாலோ, ஆசையினாலோ, படைத்திருக்கும் பதார்த்தங்களை யுன்னோடுண்ணும் போதும், அதில் உப்பில்லை, இதில் காரமில்லை யென்று பாகக்குறைவுகளைப் பதட்டமாய்ச் சொல்லாதே, சொல்லாதே. 12

உன் நல்லெண்ணங்களையும், நன்னடக்கைகளையும் இவர்கள் தாயாகக் கண்டுகொள்ள நடக்கைகளால் காட்டுவதன்றி வாயால் வலிதிற் கூறு திரு, கூறு திரு. 13

இவர்களி லொருவர், பலர் முன் உன்மீது ஒரு நாளுமில்லாத கோபத்தைக் காட்டி வைவாராயினும், இதுகாரணமாய் வைதார் இன்னாரென்றுனக்குக் கண்டிப்பாய்த் தெரியுமாயினும், அத்தருணத்தி லவரோ டெதிர்த்துப்

பேசாதிருந்து தனித்தத னுண்மையைத் தெரிந்துகொள், தெரிந்துகொள். அலேச் சாக்கிட்டு உரலே யிடிப்பது, அநுபவம் அநுபவம். 14

இவர்கள் வீட்டில் சாப்பாட்டுக்காக அடிக்கடி யொத்துக்கொள்ளாது இவர்களது மனநோவின்றித் தப்பித்துக் கொள்ளும்வகையிலேயே ஞாபகத்தைச் செலுத்துவாய், செலுத்துவாய். 15

பெருத்த விடங்களிற் கிடைக்கும் பொருத்தமான விதவிதக் கறிவகை முதலியவற்ருேடு கூடிய போஜனத்தை விட உனக்குச் சமானமானவர்களாலும், உன்னின் ஏழைகளாலும், அளிக்கப்பட்ட போஜனமே திருப்தியென் றெண்ணுவாய், எண்ணுவாய். 16

நீ அநுட்டித் தநுபவிக்கும் விரதம், அநுட்டானம், தேகசுகம், ஆத்ம சுகம், நீதி முதலிய வற்றைப்பற்றி இவர்களிடத்துப்பெருமையாய்த் தெரிவித்துக் கொள்வது அழகல்ல, அழகல்ல. 17

மோட்ச வின்பத்திற் கின்றியமையாத சாதனமாயிருக்கு மிவைகளே யுனக்குக் கீழ்ப்படிந் துள்ளவர்கள் அநுட்டித்து வருகின்ருரென் றுனக்குத் தெரிந்தால் அவைகட்கானி யுண்டாக்கா திருப்பாய், இருப்பாய். 18

எனக்கிடுவா ரெல்லாம் என் முன் வாருங்கள்; என்னைக் கேட்பாரெல்லா மென்பின் போங்க ளென்பது போல எக்காலத்தும், எவ்விடத்தும், எல்லாரிடத்தும், எக்காரியத்திலும், நாமேமுதலாயிருக்கவேண்டும்; வரும்பொருள் பெருமை யெல்லாம் நமக்கே வரவேண்டுமென்ற ஆசையும் அழுந்திய தற்பெருமைக் குணமும் நல்லார்போ னடிக்குஞ் சிலரிடத்துங் கண் கூடானமையின், அவரவர் நோக்கங் கண்டு நடந்து கொள்வது தகுதியாம், தகுதியாம். 19

நீ கட்டுப்பட் டிருக்குஞ் சமயத்திற்கும், ஒழுக்கத்திற்கும், கல்விக்கும், கனத்திற்கும், வயதிற்கும், தொழிலுக்கும், சகவாசத்திற்கும், காலத்திற்கும், தேசத்திற்கு முகந்தபடி யுன்னை ஆடையாபரணங்களா லலங்கரித்துக் கொள்வதை விட்டு, இரவல் கொடுப்பார் அநேக ரிருப்பினும், ஒழுங்கிற்கு மாறாக ஒழுகுவ தத்தமமல்ல வென் றுணர்வாய், உணர்வாய். 20

உன்னைப் பிடிக்க நான் ஓடிவந்தலுத்து மொருசிறிது மிரக்க மின்றி யோடி யோடி யொளிக்கும் ஓ ! மனமே !

பணக்காரப் பாவை பரபுருடரைப் பாராள்;பரம ஏழையே யெவனையு மிச்சிப்பாள்;

வயதுள்ள வனிதை வரனை விடுவாள்; வயது சென்றவள் மணாளனை நீங்காள்; மக்கட்பெருத மடந்தை மற்றொருவனைச் சேர்வாள்; பிள்ளைபெற்ற பெண்மணி பிறனைச் சேராள்; தருங்குலத்தையல் தன் கணவனைத் தணவாள்; தகாக்குலக் காந்தைதான் தன் கணவனைத் தணப்பாள்; பலாட்டிகன் பார்பை பத்தாவைத் துறவாள்; பலமிலான் பார்யை பதியைத்துறப்பாள்; அழகன் அழகி யணைபாளொவனையும்; அழகிலான் ஆடவள் அணைவாளொவனையும்; கட்டுத்திட்டமுள்ள கண்ணாட்டி கண்ணாளனைப் பிரியாள்; கட்டுத்திட்ட மில்லாக்காரிகை கட்டினவனைப் பிரிவாள்; கிழவன் மனைவி கெட்டே விடுவாள்; வயதுளான் வந்நி வரம்பு கடவாள்; கல்லான் மனைவி கணவனை யிழப்பாள்; கற்றான் கருங் குழல் காதலனையிழவாள்; குடியன் கோதை கூத்தி யாவாள்; குடியான் கோதை கொழுநனை மறவாள்; யார்கண்ணுக்கும் புலப்படாதவளே சமுசாரி; எல்லாரும் பார்க்க வுலாவுபவளே வியபிசாரி; வேடிக்கை, திருநாளுக்குப் போகாத விறலியே நெற்றிப் பொட்டு, துணையின்றியே வேடிக்கை, திருவிழாக்களுக்குத் தொடை தட்டும் தோகையே தட்டு; கடை வீதிக்குந் தண்ணீர்த் துறைக்குங்கெட்ட வெண்ணத்தோடு காலெடுத்து வையாத

காரிகையே கற்பரசி; காலெடுத்து வைப்பவளே பரஸ்திரீ; பந்துமித்ர சுபாசுபங்கட்குப் பார்த்தாவை வருத்திப் போகாத பாவையே பதிவிரதை; மோத்தைக்கடாப்போ லிவைகட்கெல்லா முன்தானையை யுதறி முன்னே செருகி முடிக்காய்ப் போகு முழுமகளே முறைமை கெட்டவள்; பேயாடாப் பெண் மணியே குலஸ்திரீ, அம்மாடுமரிவையே பரஸ்திரீ; வர்த்தகஞ் செய்யாதவளே நல்லவள், செய்பவளே பொல்லாதவள்; உயர்ந்த உத்தியோகஸ்தன் ஒப்யாரி ஊறிலாள்; ஊழியன் நாரி யூறுடையாள்; சூரன் சுந்தரி சோரம் போகாள், சூரமிலான் மகள் சோரம் போவாள்; பெண் பெரியதனமுள்ள குடும்ப நல்லார் புருடனைப் பிரியார், பெண் பெரிய தனமில்லாக் குடும்பத்துப் பேதையர் புருடனைப் பிரிவார் ; ஆசாரமுடையா ளவளப்பாணை கற்பழியாள், அம்மிலாக் கொடியிடை அவசிய மழிவாள்; ஒழுக்க முறைகளைப் படித்தவள் கெடாள், படியாதாள் கெடுவள் என்றும், இன்ன ஜாதியர் இன்னரோடு கலப்பர், இன்ன ஜாதியாரின்னாரைக் கலவார், இன்ன பெண்கள் முறை பார்த்துப் போவர், இன்ன பெண்கள் முறை பாரா தணைவர் என்றும், சோரம் போம் பெண்களின்னர், சோரம் போகாப்பெண்க ளின்னரென்

றும், நிபந்தனைக ளின்றிப் புருட போகத் திற்கு வக்கெடுத்துப்போவதும், அழகனுக் காசை வைத்து நீங்குவதும், காசுக்காசை வைத் தேடுவதும், ஆடையாபரணங்கட் கவாவிச் செல்வதும், மாமி, மாமனார், மஞ ளன், நாத்தி யிவர்கள் செய்யும் இம்சைக் காற்ற தகல்வதும், வைத்துக்காக்கும் வகை யில்லாத் துரோகியர் ஏமாற்றலுக் கேமாந்து ஏகுவதும், ஏவலுக்குங் காவலுக்கு மென வெண்ணிவைத்த படுபாவிப் பாதகத் தாதிகள் பரிதானத்திற்குப் பாத்தியப்பட்டுப் பதமாகச் சொல்லு மிதவார்த்தைகட் கில்லம் விட்டகல் வதுமுடையா ரின்னாரின்னா ரென்று மறிந்தும், எவ்வெவ்விதத்தாலோ "கோட்டையிற் பிறந் தாலும் போட்டபுள்ளிதப்பாது" என்பதற்கேற் பப் புத்திமயங்கி யேதுக்கு முதவாதான்பின் போவானையும் நேரிற்பார்த்தும், கேட்டு மிருக் கின்ற யானதினாலும், பேதைமைக் குணத் தையே பெரிய ஆபரணமாக அணிந்துள்ள பெண்மணிகளின் குணபேதங்களைப் பன்னூல் களிலும் பார்த்ததன்றிச் சிவமஹாபுராணம் ஸ்திரீகள் சுபாவமுரைத்த வத்தியாயம் பாக் கக்கூறியதைப் படித்து மிருப்பா யானதினா லும்,

"ஏந்தெழில் மிக்கான் இளையான் இசை வல்லான், காந்தையர் கண்கவர்நோக்கத்தான்- வாய்ந்த, நயனுடை யின்சொல்லன் கேளெனினு மாதர்க், கயலார்மே லாகுமனம்" என்ற வரிய வெண்பாவின் கருத்தை அநுபவத் தறிந்து மிருப்பா யானதினாலும்,உயிர்களை மயக்குதற்குக் காரணமான மண், பொன், பெண் என்னு மூன்றுலும் பேரவாக் கொண்டு இரவும் பகலும் கண்ணுங்கருத்தும் வைத் துழைக்குங் கனவானுக்கு ஒருகால் மண்ணாலும், பொன்னாலும் நஷ்டம் வந்தகாலத்தில் சிறிது காலம் மனக்கஷ்டமிருந்து நீங்கிவிடும்; பெண் சோரம்போவது வெளிப்படினும், அன்னியன் வசமாயினும், மண்பொன்னைப்போல் குறையாவிடினும், தேயாவிடினும், மறையாவிடினும் அவமானம் நீங்காது. கள்ளநாயகனுய அறிவிலிக்கு நஷ்டமும் கஷ்டமும், அபகீர்த்தியும் நரகமும் சொந்தமாவதன்றியும்,

அவள் பந்துக்களுக்கும் கஷ்ட நஷ்ட அபகீர்த்தி யுண்டாகும். இம்மட்டோ? அவள் தனது சுற்றத்தினரொடு கௌரவ வாழ்வினின்று நீங்கி, அபகீர்த்திக்காளாகிச் "சீவாத்து ஆண்டி இருந்துங் கெட்டான் செத்துங் கெட்டான்" என்பதுபோல, சோரநாயகன் செய்யும் பல தொந்தரவுகளால் கஷ்டப்பட்டு

இறந்த பிறகு நரகத்தை அடைகின்றாள். ஊரார் பழிக்கத் தப்பி நடந்த அவளுக்குச் சந்ததியுண்டாயின், அவள் அச்சந்ததிக்கு உலகமுள்ளவரையில் இழிசொற் பெறும் பட்டங்களைச் சேகரித்து வைத்துத் தனக்கு நரகமே கதியென்பதை ஸ்திரப்படுத்தி விடுவதையும் காண்டல் கருத லுரை அளவைகளால் நீ கண்டிருக்கின்றா யாதலினாலும், பயாஸ்கோப்பிற் காணும் சகல விசித்திரங்களும் பார்த்துக் கொண் டிருக்கும்போதே திடீரென்று மறையத் திரையையன்றி ஒன்றுமில்லாமற் போவது போலப் பார்ப்பவர்கட்கு உலகப்பற்றி லாழ்ந்து உலகபோகங்களை யொன்றேனும் விடாதாண்டு அநுபவித்துக்கொண் டிருக்கும் போதே என்னையன்றி வேறில்லையென்று தடாலென்றுவிடத்தக்க திடச்சித்த ஞாநுபவமுள்ளவர்களும், இன்னுங்கொஞ்சநாள் பார்க்கலாம், இன்னுங் கொஞ்சநாள் பார்க்கலாமென்று நாளைத்தள்ளும்படி ஆசையாற்கட்டி அடிமைகொண்டிருப்பதும் பெண்சன்மமாம். ''தந்தையாயினும் விழைவிற் றன்னுடனே யொருவயிற்றிற் சார்ந்தாரேனும், மைந்தராயினு மிக்க வனப்புடைய ரெனினவர்மேல் மடநலார்தஞ், சிந்தைநடந் திடும்'' என்றதற் கேற்ப, அவள் தந்தையாற் கெட்டாள், இவள்

அண்ணனைற்கேட்டாள், அவள் மூத்தாரைப் பார்த்துக்கொண்டாள், இவள் மச்சினனை வைத்துக்கொண்டாள், அவள் அண்ணனிடம் போனாள், இவள் தம்பியிடம் போனாள், அவள் பிள்ளையிடம் போனாள் என்று செவி மனங்கொள்ளாத கேள்விகளையெல்லாம் நீ கேட்டிருக்கின்றாயானதினாலும், பசு பட்சிகளைப் போல ஆண்பெண் கூட்டுறவிற்குக் காலவரையறை யில்லாமையினாலும், இருந்தாலு மனுசரிப்பது முபற்கொம்பாகையாலும், புருடனைச் சேரவேண்டுமென்று மவா வாறுபங்கும், போகசக்தி எட்டுப்பங்கும் புருடனைவிடப் பெண்ணுக்கதிக மானதினாலும், நன்னடக்கை நல்லெண்ணங்களைப் பலகாலும் பரீக்ஷித்து உயிர்க்குயிரா யெண்ணியிருக்கும் ஆசாரியர், எஜமான், பந்து, மித்திரர், வேலைக்காரர்களேயாயினும், ஆண்பிள்ளைக ளில்லாத சமயத்திலவர்களுத்திரவின்றிப் பெண்பிள்ளைகள் தனித்திருக்கும் வீட்டில் வியர்த்தமாகச்சென்று யாதொரு வியவகாரமும் வைத்துக்கொள்ளாதிருக்கக்கடவாய்! இருக்கக் கடவாய்!! 21

பணத்தின்மீது யாவர்க்குப்பட்சமுண்டு. எவ்விதத்திலாவது பணத்தைமாத்திரம் சம்பாதித்துவிட்டால், "பொருளல் லவரைப் பொருளாகச்செய்யும், பொருளல்லதில்லை பொருள்",

" ஒதருஞ் செல்வ மிக்கோனொருவனை சிறந்தோனாவான்" என்றபடி குலங் கல்வி ஆசாரங் குண முதலியவைகளால் ஒருவன் குறைந்தவனாயினும் அவனையும் அந்தப் பணம் கனம் பண்ணுவிக்கும். என்றாலும், ஓ மனமே! நீபெரியார் அருவருக்கத்தக்க காரியங்களை மேற்கொண்டு பணத்தைச் சம்பாதிக்க முயலாதே! முயலாதே!! 22

ஒப்பாத காரியங்களையே தப்பாது செய்யத் துணிந்த ஏ! மனமே!

உலோபகுணமுள்ள வரம்பிலாத் தனவந்தர்கள் முன்னும், அவையஞ்சு மபரிமிதக் கல்விமான்கள் முன்னும், உன் சுவல்ப வரவுக்கேற்றபடி செய்யக்கூடிய அறங்களைச் செய்தும், அல்ப கல்வியென்று அகநைந்து பின்னடையாது அவையேறிச் சொல்லுமாற்றலும் வகித்து அவர்களைவிடத் தர்மவானும், கல்விமானுமென்ற பெயரெடுப்பதை விட்டுவிட்டு வீணே பொறாமை கொள்ளாதே. அவர்களைப் போல பார கல்விச்செல்வங்களை யடையவேண்டின் நற்றொழிலையும், நல்லாசிரியனையு மடுத்து விருத்திசெய்து கொள்ள இடைவிடா முயற்சியில் ஈடுபடு! ஈடுபடு!! 23

தனக்கிருக்குஞ் சகல வல்லமையினாலே யோ, அகாரணத்தாலேயோ, ஒருவனை யொருவன் கஷ்டப்படுத்துவதைக் கண்டு கேட்டகாலத்து உன் சமர்த்தாலும் சாம, பேத, தான, தண்டமென்னும் நால்வகை யுபாயங்களினாலும் விலக்கி யொருமைப்படுத்து; அசாத்தியமாயின், வருத்துவோ னறியாமையும், வருந்துவோன் கஷ்டமும் நீங்குமாறு இரங்கிக் கடவுளை வேண்டிக் கொள்! வேண்டிக்கொள்!! 24

கால்நடைகளையும், பட்சிகளையும், ஜீவனத்தின் பொருட்டாவது, பிரார்த்தனையின் பொருட்டாவது, வேறெக்காரணத்தை முன்னிட்டாவது, பழிபாவத்திற் கஞ்சாத குரூரர்கள் வதை செய்யுங்காலத்தில் நீ பாராதே. தற்செயலாய்ப் பார்க்க நேரிடின், பார்க்கத் தூண்டிய பாபத்திற்கும், குரூரர்களின் செய்கையினை யண்டாதபடி தடுத்த புண்ணியத்திற்கும், வதையுண்ட மிருக பட்சிகளின் ஜீவன் மோட்சமடைதற்கும், எல்லாம் வல்ல இறைவனை யேத்துவாய்! ஏத்துவாய்!! 25

உண்ணுமுணவிற்கும், உடுக்குமுடைக்குமுள்ளபடியே வழியில்லாத ஏழைகட்கும், ஆதாவற்ற அதிவிருத்தர், அதிபால்யர், தீராப் பிணியாளர், கூன், குருடு, நொண்டி, சப்பாணி

முதலாயினோர்க்கும் உன்னுலியன்ற வுதவி யைச்செய்வதற்கு முந்துவாய்! முந்துவாய்!! 26

சந்தை, உற்சவம், சுபாசுபப் பிரயோஜனம் இவ்விடங்களிற் கூடுங் குப்பலினடுவே யிருக்க விரும்பாதே; இருக்க நேரிடின், வியர்த்த வார்த்தைகட்கும், அருவருப்பான பேச்சுகட்கும் செவி கொடாதே! கொடாதே!! 27

தற்பிரயோஜனத்தை முன்னிட்டு, பந்து மித்திர ஏவலாள் முதலாயினோர்க்கு ஆசை வார்த்தைகளைச் சொல்லி, எடுத்தகாரியத்தை முடித்துக்கொண்ட பிறகு, அவர்களை நீள விட்டு அதனு லவர்கள் நன்றிகெட்டவனென்றும், சுயகாரியப்புலியென்றுங் கொடுக்கும் பட்டங்களைப்பெற எண்ணுதே! எண்ணுதே!! 28

இலக்கண இலக்கியம், சித்தாந்தசாத்திரம், வேதாந்த சாத்திரம், தருக்கம், வியாகரணம், ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமென்று நாற் கவிபாடுந் திறம், உத்தமநூல்கட்குரைவரைதல், போதிக்குஞ் சக்தி, பிரசங்கிக்கும் வன்மை, தொடுத்த விஷயங்கட்கெல்லாம் மேற்கோளாகப் பெரியோர் வசனம் அல்லது பாடல்களை யெடுத்துக்காட்டும் ஞாபகசுத்தம், முதலிய கல்விப் பிரிவினைகளில் அவரவர் பூர்வ புண்ய விசேஷத்தால் சிலர்க்குப்பெரிதும், சில

ர்க்குச் சிறிதும், சிலர்க் கிரண்டொன்றுங் கை வந்திருக்கலாம். இப்படி யொவ்வொருவரிட மிருக்கு மொவ்வொரு சாமர்த்தியத்தைக் கண்டு ஏனையோரை யிகழ்ந்து கூறற் கிசைய யாதே! இசையாதே!! 29

ஒருத்தியோகம், வர்த்தகம், ஊழியம், இவைகளிலுண்மையாய்க் கஷ்டப்பட்டு அவற் ருல் வருமூதியத்தால் குடும்ப சம்ரக்ஷணையை நிறைவேற்றிக்கொள்ளல்தா னுத்தமம்! உத் தமம்!! 30

உன்னின் மேலானவரிடத்தும், சமான மானவரிடத்தும், செலுத்தும் மரியாதையை யும், உபசரிப்பையையும், தாழ்ந்தோரிடத்துஞ் செலுத்துவாயாயின், புகழும் புண்ணியமு முண்டா மென்பதைப் புந்தியிற் கொள்வாய்! கொள்வாய்!! 31

தந்தை, குரு, அதிகாரி, எஜமானன், மூத்தோன், உன்னின்மேலான உத்தியோகஸ் தன், கல்விமான், தனவான் இவர்கள் தவறி நடக்கக் கண்டாயானுலும், கேட்டாயானுலும், அதனைப் பலரறியத் தூற்ருதிருப்பதன்றி, பல தரமும் அதனுலுண்டாகுங் கெடுதிகளை நண் பனைப்போல, அடுத்தடுத்து, இடித்திடித்துக் கூறுதிரு! கூறுதிரு!! 32

உன் னூழியர்களுள் குணத்தால் குறைவானவர்கள் தெரிந்துகொள்ளவாவது, அவர்களைத் தூதுவைத்காவது, தகாதகாரியங்களைச் செய்யாதே;செய்யின், அது கருடன் காலிற்கட்டியகச்சைக்கும்,கௌரவமென்னுமரத்தை யடியோடு வெட்டிச்சாய்க்குங் கருவிக்குஞ் சமானமாமென்பதை யுன்னுவாய்! உன்னுவாய்!! 33

உனக்கிருக்கு மெவ்விதத் தைரியத்தைக்கொண்டும், உரலுக்குத் துணி சுற்றிவைத்தாலும் உற்று நோக்காது பற்றித் தடவிப்பார்த்து, உற்றாரலும், மற்றாரலும் நார்த்தனென்று சொல்ல வுடலெடுக்காதே! உடலெடுக்காதே!! 34

உன் நண்பர்கள்யாவரு மெக்காலும் உனக்கு நன்மையே செய்தல் முடியாது. ஒருகாலறிந்தோ,அறியாமலோ, தீங்குசெய்தால்,அது யாரால் எதனாலுண்டானதென்றும், எப்படிப்பட்டதென்றும், தீரயோசித்துப் பொறுக்கத்தக்கதாயின்பொறுத்து,வெறுக்கத்தக்கதாயின் வினையை நொந்து வெறுத்து உப்பைத் தின்றவன தப்பாது தண்ணீர் குடிப்பா னென்றெண்ணி, பதில்தீங்கு செய்யாதிரு. செய்ய வெண்ணினால்"கெடுப்பதொழி" என்ற வாக்கியத்தில் நம்பிக்கையற்றவனாவாய். "இட்டார்க்கிடு" என்பதுபோல நன்மைசெய்தார்க்கு நீ கூடுமான பதிலுதவியை யுடனே செய்வாய்' செய்வாய்!!

உனக்குக் கஷ்டம் வந்த காலத்தில் பிழைக்கும் வகையே முக்கியமென்றும்,படித்தவரெல்லாம் என்ன வாரிக்கொண்டார் என்றும், சிலர் கூறுமுறைமொழியை நீ பொய்யாது,பலவிதத்துங் கஷ்டப்பட்டுப் படித்த படிப்பே, சிற்றுயிர்க்குற்ற துணையாம். ஆதலால் கைவந்த கல்வியைக் கைவிடாதே ! விடாதே !! 36

நம்பிய அசக்தர்களை வஞ்சித்துச் சின்னதைப் பெரிதாகக் காட்டிப் பரிதானம் (இலஞ்சம்) வாங்கி ஜீவித்தலையே மேற்கொண்டவன், குலங்குடியிற் பெரியானாயினும், கல்வியின் கரைகண்டானாயினும், வேதாந்த விசாரணையிற் றேர்ந்துளானென யாவரு மெச்சக்கூடிய வாயாடியாயினும், அன்னான் ஈனருள் முதற்றரம்பூலம் பெறக்கூடிய மஹா ஈனனென்றும்; சமயம் வந்துழித் தனக்குச் சொந்தமான மனையாளாதியோர் மானம் விட்டு மானம் விற்றிடு முணவையுங் கூசாதுண்ணும் நாசகாலனென்றுங் கூசாது கூறுவாய் ! கூறுவாய் !! 37

உனக்குச் சமானமானவர்களும், உன்னின் தாழ்ந்தவர்களும், பூர்வபுண்ணிய விசேஷத்தால் உன்னிலும் மேலாந் தன்மையை யடைந்தகாலத்து உன்மீ தவர்கள் பழையபடி பட்சங் காட்டாதிருக்க நீயே வலிதிற்சென் றுறவாட

நினையாதே. நீ யொருகா லுயர்வடைந்த காலத்தில் அவர்கள் அந்த நிலையிலிருந்து பழைய படி வார்த்தையாடி நேசிப்பாராயின், அவர்கள் பேச்சுக்கு அருவருப்படையாமல் நீயு முன் போல் நேசப் பான்மையைக் காட்டின், பெரும் பான்மையோர் உன்னை உன்னடக்கத்திற்காகப் பெரும்பான்மையும் நன்குமதிப்பார்கள்! நன்கு மதிப்பார்கள் !! 38

“பந்திக்கு முந்து படைக்குப் பிந்து” என்னும் பழமொழியைக் காசுகொடுத்துச் சாப்பிடும் சத்திர முதலான பந்திகளிலும், துஷ்டர்கள் கூடி விருதாவிற் சண்டையிடுங் காலத்திலும், உபயோகிப்பதன்றி, உன் கிருகத்திலும், பந்து மித்திரர் கிருகத்திலும் நடக்குஞ் சுபாசுபப் பந்தியிலும், உன்னைக் காப்பவர்கட்கும், உன்னால் காக்கப்பட்டவர்கட்கும், எதிரிகளால் நேர்ந்த போரின்போதும், உபயோகித்து, வீணிலலைந்தா னென்றும், அவலத் துரோகி யென்றும், சொல்லப் பெறுதே! சொல்லப் பெறுதே !! 39

“அத்திசூ டிலகிற் சில்லோ ரகத்தொன்றும் வாக்கி லொன்றும், வைத்திதஞ் சொலலாவி யாவும் வனச்செவி யேற்ப தன்றிச், சத்திய மெனக்கொண் டேகல் சக்கினை மூடி நீண்ட, பித்திகை யேறிச் செல்லும் பேதைமை

நிகர்க்கு மாதோ'' என்ற விருத்தக் கருத்தைக் கருத்திருந்தி, போலிப் புகழ்ச்சியாலும், கள்ளத்தனமான வணக்க இணக்கத்தாலும், துதிப் பிரியரை மயக்கி உன் கொள்கையை நிறைவேற்றிக் கொள்வது போல, வேளைக்கும் வேலைக்கு மாளுக்கு மேற்ற வேஷம் போட்டு அறிவாளிகளை மயக்க வெண்ணற்க! எண்ணற்க! "பொக்கை வாயனே பொரிமாவை மெச்சுவன்." 40

நீ யறியப் பிறந்து, வளர்ந்து, படித்து, உன்னைவிட வுயர்ந்த வுத்தியோக முதலிய அந்தஸ்தி லுயர்ந்திருப்பவர்கள், குலம், பந்து, மித்திரர்களி லுனக்குத் தாழ்ந்திருந்தாலும், அவர்களிடம் கால மிடங்கட்குத் தக்கவாறு மரியாதையாக நடந்துகொள்வதற்கு மாறாக நடப்பது உன் மடமையாம்! மடமையாம்!

கள்ளொழுக்கங்களை யெள்ளத்தனையும் விடாது துள்ளி யநுபவிக்கும் ஏ சள்ளை மனமே!

எவ்விதத்திலாவது உன்மீது சந்தேகங் கொண் டிருப்பவரிடத்தும், அடிக்கடி பரிகாச வார்த்தை யாடுவாரிடத்தும், அதிக நெருக்கம் வைத்துக் கொள்ளாதே; கொள்ளாதே. 42

முகப்பழக்க முள்ள யாவரிடத்தும் உன்னந்தரங்க விஷயங்களை வெளிப்படுத்தற் கெண்ணாதே. அறிமுகமானவர்க ளநேகரிருப்பர்.

ஆப்தனொருவனிருப்ப தருமையினுமருமை. அப்படியிருந்தாலவனுடன் கலந்து தெரிவித்துப் பலாபலனைத் தேடிக்கொள்; தேடிக்கொள். 43

ஒருவன் ஒரு காரியத்தில் நல்லவனாகவும், பல காரியத்தில் பொல்லாதவனாகவும், பல விஷயத்தில் உத்தமனாகவும், ஒரு விஷயத்தில் அதமனாகவு மிருக்கலாம். அப்படிப்பட்டவர்களிடத்துக் கல்வி, செல்வம், நல்லவர் நேசமுதலியன ஒருமிக்கவாவது அவற்றுள் ஒன்றாவது பொருந்தியிருக்கக் கண்டு மலைக்காது, அவரவர்க்குரிய அந்தரங்கமான சொந்த வெண்ணம் புலப்படாமுன்னம், அவரைப்பற்றிப் புகழ்வாவது, இகழ்வாவது கூடாது. அல்லாமலும், அப்படிப்பட்டவரைப் பற்றி நல்லவனென்றாவது, கெட்டவனென்றாவது, தீர்மானமாய்ச் சொல்லாதே. எத்தனை நாள் ஒருவனுடன் பழகினாலும், அவனியற்கைக் குணம் புலப்படுவது துர்லபம். ஒருவனைப்பற்றி நீ பேசநேர்ந்தால், அன்றுவரையிற் கண்ட அவனநுபவ குறை குணங்களை மாத்திரம் பேசுவது உத்தமம்; உத்தமம். 44

நம்போன்ற ஜீவனத்தை மேற்கொண்டவர்கள் எத்தனையோ தில்லும்பில்லும் செய்து செல்வத்தை விருத்தியாக்கிக் கொள்ளுகின்

றனரே யென்று எண்ணி நீயுமப்படிச் செய்து விருத்தி செய்வதாலுஞ் செல்வம் தன் பெயரை (செல்வோமென்பதை) விளக்கப் போம் வழி தெரியாது போம். "கற்பகத்தைச் சார்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேன், முற்பவத்திற் செய்த வினை" என்பதையும், "கொடுத்து வைத்தவரையி லெடுத்து வைத்திருக்கும்" என்பதையும் எண்ணிச் சந்தோஷித்திரு; சந்தோஷித்திரு. 45

பலர்க்கு முபயோகமான பொதுப் பொருளோடும், எஜமானனுக்குச் சொந்தமான பொருளோடும், தேவாலயப் பொருளோடும், எவ்வளவு சாக்கிரதையாகப் பழகினும், தன்னையறியாமலே பாபமும், பழியுமுண்டாகும். வேண்டுமென்று கையாளுவதை, உடையவர்களும், உத்தரவாதிகளுந் தெரிந்து கொண்டால், அவமானமுந் தண்டனையு மவசியங் கிடைக்கும். "உளவறிந்தவன் களவு வெளிவராது" என்றபடி தப்பித்துக் கொண்டால் இறந்தபின்னர் நரகஞ் சொந்தமாகு மென்றறிவாய். ஈசன் பொருளைக் கவர்ந்துண்டு ஏப்பமிட்டிறுமாந்து கிடக்கு மிழிலோர்க்கு முடிவிற் சித்திப்பதை அருணகிரி புராணம்,

"விழுங்கலாஞ் செந்நெருப்பைக் கடிக்கலாந் திண்சிலையை விடத்தை யாவி, யழுங்குறு

வகையிழைத்துக் குடிக்கலாம் விடங்கொண் மிடற் றானுர் செம்பொன், பழங்கணுற் கவர்ந்துபுசித் திடின்மிடற்றி லேபிடிக்கும் பவ னில் யாக்கை, புழுங்கவே கழலுற்றி ரொறுங் குமந்த விடந்தீர்வு புகலொணுதால்".

"கங்கைவே ணியன்பொருளைக் கவர்தீம்ப ரிருக்கவது கவர்தற் குள்ளங், தங்கிழயன் றவர்நினைக்கே நா ரக்கணத்தி லழிவரவர் தாமு நிற்க, வங்கவர்தீ நட்புறுவோ ரவரொடுநட் பினர்குலமவே ரறவே மாய்வர், வெங்கொடுந்தீ நரகடைவர் சத்தியஞ்சத் தியமாணை விளம்பி னேமால்"

"ஈசனே முதலாக் தேவகாரிய விக்கினஞ் செய்தோ ரிவர்பொருள் கவர்ந்தோர்" என்றுங் கூறுவதால் தேவாலயப் பொருளன்றிப் பொ துப்பொருளையும், எஜமான் பொருளையும், நம்பியடைக்கலமாக வைத்த பொருளையும், வெளவினேரும் மேலைய திருவிருத்தப் பல னைச் சிறிதும் விடாதநுபவிப்பர்; அநுபவிப் பர். 46

நல்லவனுக நடித்துப் பொல்லா தவனுகப் போகும் நன்றி கெட்ட ஏ மனமே!

பெரியா ரென்றும், மஹா னென்றும் நல் லோர்களால் கொண்டாடத் தக்கவரை, ஏதோ

பொறுமை காரணமாகப் புறங்கூறின் (தூஷிக்கின்), "மேலோர் மீதொருவன், தூற்றிக் கூறும் வசைச்சொற்கள் சொன்னேன் மீதே தோயுமால்." என்றபடி அத்தூஷணையுன்னைச் சாருவதன்றி, எவ்விதத்தும் உன்னை நன்மார்க்கத்திற் காளாக்கவொட்டாது. மேலும், நீ பொறுமை யென்னுந்துன்மார்க்க புருடன் காலின் கீழ்ப்பட்டு மிதியுண்டு பொறுமை யென்னும் பதத்தைத் தலைகீழாகவாசிப்பதானுண்டாகும். மைறுபோ என்று பொருளாய்ப்போவாய்; "அழுக்கா றெனவொருபாவி திருச்செற்றுத், தீயுழி யுய்த்து விடும்" "எரியாற்சுடப்படினு முய்வுண்டா முய்வில்லை, பெரியார்ப் பிழைத் தொழுகு வார்" "தாரணியி லெவரேனுந் தூய ருரிற்றன் றலையின்முடி தரித்த தொப்பாஞ், சீரணியுஞ் செல்வமவர் படைக்கிற்றன் றாய் மனைசேய் செத்ததொப்பாம், காரணமே யொன்று மின்றிச் சுகதுக்கந் தன்வலியாற் கணத்துக் குள்ளே, பூரணமா வாக்கிடுவோன் பொறுமையுளோ னன்றியெவன் புவியின் கண்ணே" என்னும் செய்யுள்களையும் அறிவாய்; அறிவாய். 47

நன்மார்க்கத்தில் நாளைக் கழிப்பவனாயினும், மேற்கண்ட தூஷணைக்குச் செவி கொடுத்து ஆமோதிக்கின், அம்மார்க்கங்கள் வயிறு வளர்க்க மேற்கொண்ட பொய்ம்மார்க்க

மாவனவாம். மேலும், "சொல்லுவார் சொன்னாலும் கேட்பார்க்கு மதியில்லையா" என அறிவுடையோரா லேசப்படுவதன்றிக் குற்றஞ் செய்தவனோ டெந்தையா யிருப்பவனுக்கும் ஒரே தண்டனையாமாறு போலவும், பன்றியுடன் சேர்ந்த கன்றும் மலந்தின்னுவது போலவும், அவனுடையும் பழிபாவங்கட்கு நீயும் பங்காளியாவாய். காக்கைக் கிடந்தந்த அன்னத்தா ரிருப்பிழந்த வாறு கீர்த்தி புண்ணிய முதலியவற்றை அகாரணமா யிழப்பதோடு அறிவுடையோரா லொதுக்கியும் வைக்கப் படுவாய்; ஒருவரை நிரோதுவாய்த் தூஷிக்கும் மௌடீகனைவிடக் காதுகொடுத்துக் கேட்பவன் பெருமௌடீகனாவான்; ஆவான். 48

இடுவதை யேற்றுக் கொள்ளும் பேர்வழிகளும், "குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்த தென்றுகொடுக்கறியா, திறக்குங்குலாமர்" களும் இக்குவலயத் துள்கோடாநு கோடியுண்டு, புண்ணியத்தைமுன்னிட்டோ, புகழினைக் குறித்தோ, போற்றலை விரும்பியோ, கைம்மாறு கருதியோ, எதையாவ தொன்றை முன்னிட்டுக்கொடுப்பது என்ற சத்கர்மத்தின் சொரூபத்தைத் தெரிந்து கொண்டு தர்மஞ்செய்யும் தர்ம சொரூபிகள் மிகு சிலரே. அத்தகைய வுத்தமர்கள் செய்யுந் தர்மத்தை உன் உனுத்த

குணவிசேஷத்தால் அது சொத்தை, இது சொ ள்ளையென்று இகழ்ந்து கூறு முன்னினிழிவா னவொரு ஜன்மம் அப்போது மிருந்திராது; இப்போதுங் கிடையாது;எப்போது மகப்படா தென்றெண்ணுதி; எண்ணுதி. 49

கப்பல் யாத்திரை, ரயில் பிரயாணம், டிராம்வே போக்குவரவு, வழிப்பிரயாணம், வியாதி, உன்னை யாள்பவரில்லத்திருக்க நேர்ந் தகாலம் ஆகியவிச்சமயங்களிலும், சில குடித் தனஞ்சேர்ந்தவீடு, உத்தியோகசாலை, சத்திரம், காப்பிஹோட்டல் இவ்விடங்களிலும், ஆசாரத் தை அடிமடியிற் கட்டி வைப்பதழகாம், அழ காம். 50

தக்கமுதல் அல்லது லாவாதேவியின்றிப் பெருத்த வர்த்தகஞ் செய்து லாபமடைய வெ ண்ணுவதும், தரித்திரத்தில் கௌரவத்தை விரும்புவதும், நூலிலக்கணங்களறியாதவன் கிரந்த கர்த்தாவாக ஆசைப்படுவதும், கை காலல்லது தெப்பமில்லாது கடலிலிறங்கியவன் கரை சேர்வதையும், கைத்திட ஏலாப் பொ த்தல் வத்திரத்தில் மாணிக்கங்களை மூட்டை கட்டுவதையும், தேகவுறுப்புக்களில்லாதவன் அழகிய யௌவன ஸ்திரீயைக் கட்டியணைத்து இன்பமநுபவிப்பதையு மொக்குமென வோர் வாய்; ஓர்வாய். 51

" உளவில்லாமலூரழியாது " என்றபடி உன்னுடைய எதிரிகளின் பந்து மித்திரர்கள் அவ்வெதிரிகளின் அந்தரங்க உளவுகளைச் சமயம் வந்தபோது உனக்கு ரகசியமாகத் தெரிவிப்பதுபோல, உன்னோடு மேலுக்குமாத்திரம் உறவாடும் உன் பந்து மித்திரர்களும் உன்னுளவுகளை யெதிரிகட்குத் தெரிவிக்கச் சித்தமா யுள்ளார்களாதலால், நீ யாரிடத்தும் பகை பாராட்டாமலும், கரவாடு மனத்தரா யுறவாடுவோரையெல்லாம் பந்து மித்திரர்களென நம்பி மோசம் போகாமலும், தந்திரமாய் நாளைக் கழிப்பதே நல்லதென நிரந்தரமுமெண்ணுவாய், எண்ணுவாய். 52

உத்தியோகம், கூலிவேலை, ஊழியமுதலிய ஜீவனங்களில்முன்னிரண்டிலும் மணிகணக்கின் படி வேலைசெய்து மாதம் அல்லது தினம் ஏற்படும் சம்பளம், அல்லது கூலியைப்பெறுவதும், சில வேலைத் துறைகளில் சில எஜமான்களிடத்தில் ஊழியஞ் செய்வோர்க்குமுன் போலாவது, அல்லது சாப்பாடிட்டு மாதம் அல்லது வருஷத்திற்கு இவ்வளவெனச் சம்பளமோ அல்லது தானியமோ தரக்கொள்ளுதும் வழக்கமாம். அதை விட்டாலும், விதியில்லை அப்பாற் போனாலும் கதியில்லை என்றபடி சிலரிடம் கூலி வேலைக்கும், ஊழியத்திற்கு மாளாகி ஜீவிப்பையேல் சுபாசுபம், போ

க்கு வரவு, தேகசுகாசுகம் நேர்ந்தகாலத்தும் அவைகட்காளாகாது முதலாளி (எஜமானன்) நினைத்தபோதெல்லாம் நேரமெனக்காத்திருந்து தலையைச் சுற்றிக் கவாளத்தைவாயில் வைப்பதுபோலஇடப்பட்ட வேலைகளைச் சுறுசுறுப்பாகச் செய்து தலைவனுக்குச் சந்தோஷத்தைக்கொடுத்தால், அவர்கள் உன்வறுமையைக் கெடுப்பார்கள். ஆனை மெச்சின ஆண்டையும், மருகியை மெச்சிய மாமியுங் கிடையார்களானதால், அவர்கள் மெச்சுவதை நம்பி இறுமாப்படைவையேல், வஞ்சனையே உருவாக்கொண்ட நரியின் நயவஞ்சனைப் புகழ்ச்சிக் கிறுமாந்த காக்கையடைந்த கதியையடைவாய். இட்ட வேலையைத்திட்டமாகச் செய்து முடிக்கத் தப்பிப்போன காலத்துன்னையிகழுமிகழ்ச்சியையே யுண்மை யென நம்பி மேலுமேலு மப்படிப்பட்ட இகழ்ச்சிக்காளாகாதபடி காத்துக் கொள்வது உத்தமம்; உத்தமம். 53

நாமநுபவிக்கு மிம்மைப்போகங்களுக்குள் முக்கியமா யிருப்பனவற்றுள் முக்கியமானது மண், பொன், பெண் ஆகிய இம்மூன்றுமாம். இவைகளிருந்தாலுந் துக்கமாம்; இல்லாவிடினும் வருத்தமாம்; இருப்பினும் அவற்றைக் காப்பாற்றுவது துன்பமாம்; இவைகளிருந்து ஏதோவொருவிதத்தினீங்கினுமல்லலாம். முடி

வில்இவைகட்குட், நமக்கும் யாதொருசம்ப ந்த மின்றிப் போவது அநுபவம் ஆயினும், இவற்றைப்பற்றிச் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு ஓரிடத்துத் தாழ்த்தியும், ஓரிடத் துயர்த்தியும் நூல்கள் கூறுகின்றன. அவை "மண்ணுசைப் பட்டேனைமண் ணுண்டு போட்டதடா," "சிறி யோே மதிக்கு மிந்தச் செல்வம்", "மாணிக்க முத்து வயிரப் பணிபூண்டு, ஆணிப்பொன் சிங்காதனத்தி லிருந்தாலுங், காணித்துடலை நமன் கட்டியுயிர் கொள்ளுங்கால், காணிப் பொன் கூடவரக் காண்கிலையே நெஞ்சமே" என மண் பொன்களுக் கிகழ்ச்சி கூறியும், "இல்லா ளகத்திருக்க வில்லாத தொன் றில்லை," "எல்லா மில்லை யில்லி லோர்க்கே", "தலையெலாம் புலவிமாதர் தாள்படாக் கொழுந ரில்லை," "அருந்தவ மழிக்கு மழகுடை யணங்கிற் கசுப்படா விறலினன் யாரோ","நற் றவம தாகுமில்ல றந்தனை நடாத்திச், சுற்றமற நீங்குதுற வேதுறவு தம்பா" என்று புருடர்க் குப் பூவையரவசிய மெனப்புகழ்ந் துரைத்தும், இல்லறத்திற் கின்றியமையாத் துணை மனைவி யென ஆன்றோர் கூறிப்போந்தனரன்றோ? அவை யனுபவத்திலு மவசியமென்றேற்படுவ தாயினும், மணிமாடங்கள் விளைநிலங்கள் தோட்டங்கள் ஆகிய அசையாப்பொருள்களும்,

நூறு, ஆயிரம், லட்சம், கோடியெனவளருந் ரொக்கங்களும், நகைநட்டு முதலிய அசையும் பொருள்களும், ஒன்று பத்தாகவிருத்தியாகுந் தோறும் அருந்தவிரலுக்குஞ் சுண்ணாம்பு இடா லோபியே யாயினும் அவனுக்குப் பெருமையும் புகழும், கூடவே வளருகின்றன வென்பதுபிரசித்தமாம். முற்கூறியவற்றிலொன்றான பெண் விஷயத்திலே பெரியோரிட்ட கட்டளைக்குப்பிரதிகூலமாகப் பலரை மணக்கிழத்தியராகவும், காமக்கிழத்தியராகவும், வரித்தாயாயினும், களவில் பலமாதரைக் கலந்தா யாயினும், இம்மையிற்றாழா விகழ்ச்சி முதலியவற்றாற்றுன்பமும், மறுமையிற் குறையா நரகமும் சித்திப்ப துண்மையாதலின், மண், பொன்களின் விருத்தியை கூறிக் கொள்வது போல, அறிவாளி யெனப் பலராலுஞ்சொல்லப் பட அவாவுவையேல், வினைக்கீடாய் நேர்ந்து வல்லமைக் கீடாயநுபவித்த அரிவையாரிலக்கத்தை அறிவுடையாரருவருக்கும்படி யறையாதடக்குதலே யழகாம்; அழகாம். 54

எந்தவூரில், அல்லது எந்தக் கிராமத்தில் குடித்தனக்காரருள் எச்சாதியார் அதிகமாயிருக்கின்றார்களோ, அவர்கட்கு ஏனையசாதியார் அடங்கியிருத்த லியல்பாம்; இயல்பாம். 55

பாப மேலிட்டால், தாழ்ந்தசாதியிற் பிறந்தோர் அல்லது சேர்ந்தோர், அதிதரித்திரத்திற் காட்பட்டோர், அங்கவீனமுடையோர் இவர்களைச் சமயம் வந்தபோது உல்லங்கனம் செய்வதை யொழிப்பாய், ஒழிப்பாய். 56

தந்தை மகனிடத்தும், மகன் தந்தையிடத்தும், புருடன் மனைவியிடத்தும், மனைவி புருடனிடத்தும், தமையன் தம்பிடத்தும், தம்பி தமையனிடத்தும், குரு சிஷ்யனிடத்தும், சிஷ்யன் குருவிடத்தும், எஜமான் ஏவலனிடத்தும், ஏவலன் எஜமானிடத்தும், ஊரான் ஊரானிடத்தும், ஜாதியான் ஜாதியானிடத்தும், நண்பன் நண்பனிடத்தும் கொள்ளும் பொறுமையே பொறுமையிற் றலையென் றறிவாய், அறிவாய். 57

ஒருவனை யொருவன் சிநேகவொற்றுமையாலும், பந்தொற்றுமையாலும், வேறு காரணங்களாலும், அவர்களுக்குள் வழங்கும் அடாபட்டத்தா லாவது பரிகாசப் பெயராலாவது அழைக்கும் வழக்கம்போல, உன்னை யொருவர் தாம் நினைத்த ஆள் தானென்றெண்ணி மேற்படி பட்டத்தாலாவது, பெயரா லாவது அழைத்தால், அழைத்தவன் யாரென்றறிந்த விடத்து, உன்னையல்ல இன்னொருவனைப் பார்த்தேனென்ற

போது, பேசாது திரும்புவதுதான் பெருமை யாம், பெருமையாம். 58

எவ்வேளையிலும், எவ்வேலையிலும், யோக்கியனை உன்னிஷ்டப்படி திருப்புவது சாத்தியமாம்; அயோக்கியனை யப்படிச்செய்வ தசாத்தியமாம்; திருப்புவானுய நீ அயோக்கிய னுயின் யோக்கியனு மயோக்கியனுவா னென்பதை யோர்வாய், ஓர்வாய். 59

சிலர் மனிதவுருவத்தைமாத்திரம் பெற்று, குணத்தாலும், செய்கையாலும், மிருகத்திலுந் தாழ்ந்த முழுமூர்க்க மூடர்களாயிருப்பார்கள். அப்படிப்பட்டவர்களின் விரோதமுண்டாய காலத்துத் தனித்துத் திரிவதும், வீட்டின் புறத்துறங்குவதும், ஆபத்தெனவே அறிவாய், அறிவாய். 60

மனையாள், இளங்குமாரர்கள், மாணுக்கன் எளியவன், ஊழியன் இவர்கள் சிறுபிழை செய்தவிடத் தெழுந்த கோபத்தைக் கூடியமட்டும் சாந்தப்படுத்தப் பழகுவது மனம் சாந்தமடைதற் கோ ரறிகுறி யென்று அகத்திலெண், அகத்திலெண். 61

யோகிகள் அல்லது மஹான்கள் கொடும் விலங்குகள், போலத் தனித்திருந்து நல்லானென்று பெயரெடுப்பதைவிட, அவசியமான அல்ல

து பரோபகாரமான பல வியவகாரங்களிலும் தலையிட்டு, பலரோடும் பழகி நல்லா னெனப் பெயர் பெறுவதே நன்றும், நன்றும். 62

நீயிருக்கும் ஜீவனசாலையில், சோம்பன் மூடன், கோபன், முரடன், பொறாமையன், நயவஞ்சகன், புறங்கூறுவோன், ஆள்காட்டி, அகங்காரி, தற்பெருமையன், துதிப்பிரியன், பேராசையன், கெடுநினைவன், அசத்தியன், படாடோபன், குடியன், மடையன், திருடன் முதலானவர்களிருத்தல் கூடும். இவர்களோடு கூடியுங் கூடாமலுமிருந்து உன்னுலவர்கட்கும், அவரா லுனக்கும், கெடுதிவராமற் காத்துக் கொண்டு நாள்கழிப்பதே சாமர்த்தியத்துள் சாமர்த்தியமெனச் சாற்றலாம், சாற்றலாம். ()

விஷயாகார விருத்தியைத் தாவி
விளக்கமேவாத துளக்கமின் மனமே.

உன்னுடைய கல்வித்திறமையையும், அநுபவ ஞானத்தையும், உயர்ந்த நடையையும், ஜாதிப்பெருமையையும், அதநில் பிரியமுடையவர்களும், உன்பால் தாட்சண்யம் வைத்தவர்களும், உன்னுதவிக்கெதிர் பார்த்தவர்களுமே புகழ்ந்து பேசுவார்களல்லது, உன்னை யறியாதாரும், உன்னுதவிக் கெதிர்பாராதாரும் அற்பர்களாயினும் புகழ்வ தரிதென்பதைப் புந்தியிற் கொள்வாய், கொள்வாய். 64

உன் கோரிக்கையை ஒருவர்க்குத் தெரி
விக்க வேண்டியிருந்தால், அவரை அவர் வீட்
டிலாவது உத்தியோகத் துறையிலாவது வே
றிடத்திலாவது கண்டபோது அவர் முகக்குறி
முதலான நேர்மையைக்கூடியவரையில் நேரிலா
வது, விசாரித்தாவது தெரிந்து கொண்டபிற
கு தான், தெரிவித்த லியல்பா மியல்பாம். 65

உன்னோடு சிலர் பொதுவா யநுபவிக்க
வேண்டிய தெய்வீகத்தாற் கிடைத்த பலனில்
ஏற்றத்தாழ்ச்சி யுண்டான போதும், உனக்
கடங்கி நடப்போர் முதலியோர்கட்கு, பணத்
தாலாவது, தேகத்தாலாவது, வாக்காலாவது,
நீ அவசியமாய்ச் செய்யவேண்டிய உதவியை
உன் மனச்சாட்சிக்கு விரோத மின்றிச் செய்
யாத போதும், உன்னின் மிக்கா னுன்னைக்
கண்டித்தும், நின்னை யொப்பா னுன்னிடம் வா
தாடியும், நிறைவேற்றிக் கொள்வது போல,
உனக்கடங்கிபவனு லாகாமையால், அவன்
அதனால் வருந்தும் வருத்தமே, உனக்கும் உன்
புண்ணியத்திற்கு முள்ள பொருத்தங்களை வில
க்கும் போமெனத் தெளிவாய், தெளிவாய். 66

உனக்குத் தெரியாதவர்கள் சேர்ந்திருக்
கும் கூட்டத்தில், உனக்குத் தெரிந்த ஒருவ
னிடம் உனக்காகாதவனைச் சுட்டித் தாழ்வாகப்
பேசுவது தகாததாம், தகாததாம். 67

ஒருவனுடைய சொல்லைக் கொண்டு நல்லவனென்பதைவிட, அவன் செய்கையைக் கண்டு நல்லவனென்பது நன்றும், நன்றும். 68

உன் தீவினையின் பலனே, ஒருவனை யுனக்கு மோசக்காரனுக்குவிப்பதும், நல்வினையின் பலனே, உபகாரியாக்குவிப்பதும் உண்மையாதலாலும், ஒருகா லபகாரஞ் செய்தவன், மறுகாலுபகாரஞ் செய்வதும், உபகாரஞ் செய்தவன் அபகாரஞ் செய்வதும் அநுபவமாதலாலும், ஒருவன் ஒரு விஷயத்தில் ஒரு காலத்தில் மோசஞ் செய்வானுயின், எல்லாரும் எல்லா விஷயத்திலும், எக்காலத்திலும், மோசஞ் செய்வார்களென்ற சந்தேகமும், ஒருவனுபகாரஞ் செய்வானுயின் மற்றவர்களும் உபகாரிகளாகவே யிருப்பார்க ளென்ற நம்பிக்கையும், பிடிவாதமாகக் கொள்ளுவையாயின் உன் வாழ்க்கை அல்லது லௌகிகம் செவ்வனே நடைபெறுதென்பதை நம்புவாய், நம்புவாய். 69

நீ ஒருவனை ஒருவிஷயத்தில் மோசஞ் செய்வையாயின், மறந்துசெத்தேன் பிராணனே வாவென்றுல் வாராதென்பது போலவும், அரைக்காசுக்குப்போன மானம் ஆயிரம்ரூபாய் செலவழித்தாலும் வாராதது போலவும் உன்னை யோக்கியனெனக் கூறுது அயோக்கியனென்றே உலகஞ் சொல்லு மாதலால், அப்

படிப்பட்ட பட்டப் பெயர் வரவொட்டாது, அச்சத்தையும் நாணத்தையும் பசுமரத்தாணி போல் பதியவைத் தொழுகலே பண்பாம், பண்பாம். 70

குழந்தைகளாலும், விருத்தர்களாலும், தற்கால நாகரிகர்களுண்ணும் வகைகளாலும், லாகிரி வஸ்துக்களாலும், காப்பி ஹோட்டல் களாலும், சத்திரச் சாப்பாடுகளாலும் சோடா வகைகளாலும், சோற்றுக் கடைகளாலும், சோரத்துவத்தாலும், பணத்திச்சையாலும், லௌகிகங்களாலும், தரித்திரத்தாலும், எச்சிற் கலப்பும், ஆசாரநாசமும், ஜாதிப்பிரிவினையின் கட்டுப்பாட்டிற் கானியும், இலைமறைகாய்போ லெங்கும் பரவிவிட்டபடியால், குடும்ப விருத்தி க்காவது லௌகிகத்திற்காவது பிரயத்தனஞ் செய்யுங்கால், ஏறக்குறைய சரிவரப்பார்த்துக் கொள்வதே தகுதியாம், தகுதியாம். 71

உன்னைப்பார்க்கிலும் எல்லாவற்றுள்ளும் எவ்வளவு தாழ்ந்தவனாயினும், தற்பிரயோஜன த்தை முன்னிட்டுக் கூறும் நியாயத்தை அங்கீ கரிப்பது தான் மானுஷீக வியல்பென் றுணர் வாய், உணர்வாய். 72

விளக்கச் சாலையில் வேண்டுவ கொளாது
விடயச் சந்தையில் வெருண்டலோ மனமே!

குரு, மாணாக்கன், யஜமானன், வேலைக்காரன், தாய், தந்தை, தமையன், தம்பி, மனைவி, மகன், மகள், பந்து மித்திரர் முதலியோர் உனக்கு லாபத்தைக் கோருவது போல நஷ்டத்தையும், நஷ்டத்தைக் கோருவதுபோல லாபத்தையும், மானாபிமானங்களையும் விளைவிக்குங்கால், வாழைப்பழத்தில் ஊசியைச் சொருகுவதையும், வாங்குவதையும் நிகர்க்கு மானதால்; இதைக் கண்டு பிடிப்பது கஷ்டமாகவேயிருக்கும். கண்ட பின் கேட்ட காலத்து லாபம், நஷ்டம், மானம், அவமானம், இந்நான்கிலொன்றாவது இரண்டாவது வருமாதலால், இவர்களிடம் பட்சா பட்சங்களை மிதமாக வுபயோகப் படுத்தலே மேலாம், மேலாம். 73

செல்வச் செருக்காலாவது, மற்றெவ்வித காரணத்தை முன்னிட்டாவது, வீட்டிலிருந்து கொண்டே உன்னைத்தேடி வருபவர்கட்கெல்லாம், வீட்டிலுள்ளவர்களை அல்லது வேலைக்காரனைக் கொண்டு இல்லையென்று சொல்லச் சொல்வது, தற்பிரயோசனத்திற்கே சமயத்தில் தடுமாற்றம் உண்டாக்கு மென்பதை அறிவாய், அறிவாய். 74

நீ ஒரு குடும்பியா யிருக்குங் காலத்துஉன க்குத் தெரிந்தவர்கள், உனக்கடக்கமானவர் முதலியோரிடத்து, உனக்கவசியமான ஒரு பொருளிருக்கக் கண்டாலும், அல்லது இவர்க ளிடம் உள்ள பொருளைக் கண்டபோது அஃது உனக்கவசியமென்று தோன்றினாலும், அவர் கட்கும் அப்பொருள்கட்குமுள்ள அவசியம், அநாவசியத்தை நன்றாய்த் தெரிந்துகொண்ட பின்பு உன்னிஷ்டத்தை அவரவர்க்குகந்த மரி யாதையாகக் குறிப்பால் தெரிவிப்பதை விட்டு விட்டுச் "சுரணை கெட்டவன் சொந்தக்காரன், அதுதானுங் கெட்டவன் பங்குக்காரன்" என்ற தற் கேற்ப, தடாலென இலவசமாகக் கேட் பது, அடாததாம், அடாததாம். 75

ஓர் ஏழைக்கு ஏதாவதொரு விஷயத்தில் 4 அணு வர வேண்டியபோது, அதற்காகவாக் காலும், தேகத்தாலும் முயற்சிசெய்து, ஆடு நனைகிறதென்று தோண்டான் குந்தியழுவது போன்ற இரக்கத்தோடு கூடிய பட்சமுடை யான் போலவும், நீதியை முதலிலிருந்துகடை சிவரையிலுணர்ந்த நின்மல மனமுடையான் போலவும், நடித்துக்காட்டும் நீ, அவனுக்கு ரூபாய் 40 அல்லது 400 வரவேண்டிய காலத் தும், அம்மாதிரி முயற்சி செய்து, பட்சம் அல் லது நீதியுடைமையைக் காட்டுவதுதான் கன மாம், கனமாம். 76

கண்டெடுத்ததுபோல அவனுக்கு இல வசத்திலேனா, அதிர்ஷடத்திற் கேற்றபடிமுயற் சியிலேனா, கிடைத்த பொருள் எனக்குக் கிடைத்தால், கோயில்கட்கும், பந்தாமித்திரர்களில் ஏழைகளாயுள்ளவர் கட்கும், வேலைக்காரர்கட்கும், தான தருமங்கள்செய்து விடுவேனென்று டம்பமாக அளந்து கொண்டிருந்த வனுக்கு அப்படி யொருகால் கிடைத்த காலத்தில் நாட்டியவாறு செய்து நலம் பெறல் நன்றாம், அப்போதது முடியாது, முடியாது. 77

நம்மினு முயர்ந்த சாதியா னென்று சொல்லிக் கொள்பவனுக்கும் நமக்கு மென்னபேத மிருக்கிறது. “ஊத்தைச் சரீரத்தை யாபாசக் கொட்டிலை யூன்பொதிந்த, பீற்றற் றுருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பேசரிய, காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்ட” மென்றும், “தோலிரத்த மெலும்பிறைச்சி சுக்கில மேதை மச்சை யொன்றாய்த், தூலீ கரித்தவுடம்பு” என்றும் பெரியோர் சொல்லுவதற்கியாதும் பழுதில்லையே! நம் வீட்டிலேன் பகிரங்கமாகப் போஜனஞ்செய்வது கூடாது என்றும், சந்தேகமும், கோபமும், மனவருத்தமும், அவமானமு முனக்கிருக்கக்கூடும். உன்னின் எவ்வளவோ தாழ்ந்த ஜாதியானுண்ட வோட்டல் பாத்திரத்தும், நீ குடியனு யிருந்தால் தோட்டியுங்

குடித்துவைத்த குடுவைமுதலிய எச்சிற் பாத்திரங்களில்கூடச் சாப்பிடவுங் குடிக்கவும், இன்னான் இன்னாளென் றறியக்கூடாத ஆண் பெண்கள் சமைத்து விற்குங் கறிவகைகளைத் தின்பதற்கும் சம்மதித்த நீ, உன்னின் ஒருபடி தாழ்ந்த சாதியானென்று நீ எண்ணிக்கொண்டவனிடம் உண்ணச் சம்மதியாததுபோல, உன்னினுயர்ந்த சாதியான் பகிரங்கமாக வுன்னிடமுண்பதற் கொப்பான். சிநேக முதலிய வொற்றுமைகளால் தாழ்ந்தவனிடம் நீயும், உயர்ந்தவனுன்னிடமும் ஒவ்வொரு காலத்துண்ண நேரிடினும், அதையே தாபித்துப்பேசுவ தவ்வளவு உசிதமல்ல வென்று ஓர்வாய், ஓர்வாய். 78

சுகவாழ் வடையச் சோர்ந்து சோர்ந்துட்கி
இகவாழ் வினுக்கே யேங்குறு மனமே!

செய்யுள், வசனம், நூலுக்குரையியற்றல், உபாத்திமைத்தனம், யாதாவதொரு விஷயத்தை உபந்நியசித்தல், பிரசங்கித்தல், பழைய நூல்களைப் பரிசோதித்து அச்சிடல் முதலிய காரியங்களை மேற்கொண்ட வித்துவான்களும், விதம் விதமான மருத்துவங்களைக் கற்றுள்ள வைத்தியர் (டாக்டர்) களும், மனையடி சாத்திர முதலிய சில்ப சாத்திரங்களைத் தெரிந்த சில்பி (இஞ்சினீயர்)களும், நியாய நூல்களோதிய நியாயாதிபதிகளும், வக்கீல்க

ளும், சமையற்காரர்களும், ஓவிய (சித்திர) க்காரர்களும், விவசாயம் பயின்றவர்களும், கப்பல், ரயில், ஆகாயவிமானம், டிராம்வண்டி, மோட்டார்கார், இன்னுமுள்ள இதர வண்டிகளை யோட்டுபவர்களும், காலக்கணிதர் (வானசாத்திரி) களும், சைகை, ஒலிமுதலியவற்றால் வீரர்களை நடாத்தும் தளகர்த்தர்களும், ஏனையவித்தைத் தொழில்களின் றலை நின்றவர்களும், அவரவர் மேற்கொண்ட கல்வி, அல்லது தொழில்களில் பூரணப்பயிற்சிக்குறைவாலும், தேர்ந்து பட்டம்பெற்றுள்ளோ மென்னும் பெருமிதத்தாலும், அநுபவசாலியெனப் பல்லோராலும் புகழப்பட்டிருக்கிறோ மென்னு மலட்சியத்தாலும், "கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவு" என்னு மொப்பற்ற வாக்கியப் பயனையோராத அவசரத்தாலும், அசாக்கிரதையாலும், அறிவு செயல் முதலியவற்றை அடியோடுபெயர்த்தெறிவதற் கேதுவான அமிதலாகிரிப் பழக்கத்தாலும், மறதியாலும், தேகசௌக்கியக் குறைவாலும், மற்று மசந்தர்ப்பங்களாலும் தமக்கேயாவது பிறர்க்கேயாயாவது தமக்கும் பிறர்க்குமாவது கெடுதியை விளைப்பதுபோலச் சோதிடத்திற் பயின்றவர்களும் முற்கூறிய காரணங்களாலும் தன் பட்சி துயில், சாவு, முதலியவற்றி லிருப்பதை

யறியா துரைக்குங் காலத்திலும், நேற்றுச்சொன்ன பலனுக்கு இன்றைக்குச் சொல்லுவது மாறுபட்டிருப்பதாலும், ஒரு சோதிடர் சொன்னபடி இன்னொருவர் கூறுவதில்லை யானதாலும், சோதிடத்திற்கு முக்கியாங்கமான பஞ்சாங்கங்கள் பேதப்பட்டிருப்பதாலும், ஒருவற்குப் பலித்து, மற்றொருவர்க்குப் பலியாமற் போவதாலும் எவ்வளவு சாக்கிரதையாகக்கணித்துக் கூறினும் யுகதர்ம விசேஷத்தால் பலித்தும் பலியாமலும் போகும் என்பது தோன்ற, ''தக்கசகுனமொடுசாமுத்திரியஞ் * சொல், மிக்கவசரிரிகனவிவ்வைந்து—மிக்கலியிற், கூடினுங் கூடிவிடுங் கூடாமலேயொருகால், வீடினும் வீடிவிடும்.'' என்று கூறியுள்ளதாலும், சோதிடத்தினு லுன் பலாபலன்களைத் தெரிந்து கொள்ளமுயல்வையேல், நன்மையாயின் சந்தோஷமும் தீமையாயின் தீராத்துன்பமும் சித்திக்கும். ஒவ்வொரு கணமும் மரணத்தின் வாயிலிருப்பதை யுண்மையென வுணர்ந்திருப்பினும், சோதிடத்தினால், பிராணஹானி யுண்டாகுங் காலத்தைத் தெரிந்து கொண்டவனுக்கும், தூக்குத் தண்டனைக்குள்ளாயினனுக்கும் உண்டாஞ் சஞ்சல மொன்றுனதால், சோதிடத்தினல் நன்மை தீமைகளைக் கேட்டுக் களிப்பதும், வரு

* சொல்—சோதிடம்.

ந்துவதும், பொருந்தாத தாம்; பொருந்தாத தாம். 79

உலகத்துள்ள பற்பல தொழிலாளர்களில் சத்தியமும் நம்பிக்கையு முடையவன் கிடைப்பதரிதினு மரிதானதால், அவர்களை நம்பிக்கெட்டே னென்று சொல்லிக்கொள்வதற்கு முன், அவ்வேலையில் நீயுங் கண்ணுங் கருத்துமாக விருப்பது நன்மையாம்; நன்மையாம். 80

அன்னிய தேசவாசிகளிடம் தாவரசங்கம சொத்துக்களை வைத்துக் கடன் வாங்கவும், உன்னிடம் பழகவாரம்பிக்கும் போதே உன்னை எவ்விதத்திலாவது மோசஞ் செய்ய வேண்டுமென்னுந் துர்எண்ணமுடைய மடைய துன்மார்க்கப் பெரும்பாதகப் படுபாவிகள் மலிந்துள்ளா ராதலின், அனுபவமில்லார் கையெழுத்தொன்றை மாத்திரம் நம்பி அண்டிமாண்டின் மீது கடன்கொடுக்க நேர்ந்தபோது கடன்வாங்குபவனுடைய நெருங்கிய பந்துஅல்லது சிநேகர்களி லிருவர்க்குக் குறையாத சாட்சிக் கையெழுத்தோடு கைக்குறியு மில்லாத விடத்துக் கடன் கொடுத்தலும், கஷ்ட நஷ்டமுண்டாக்கு மென்பதை கவனிப்பாய்; கவனிப்பாய். 81

ஒருவன் அநுபவித்த, அநுபவிக்கிற, அநுபவிக்கப் போகிற சுகதுக்கங்களை உன்னிடஞ் சொல்லிக் கொள்ளுங்கால் நீ பெருமிதங் கொண்டாவது, பராமுகமாகவாவ தில்லாமல் சொல்லும் விஷயங்கட்கேற்ப. முகக்குறியுடன் "பக்கத்துச் சொல் பதினாயிர"மானதால், சமாதானம், தைரியம் ஆலோசனைகளைச் சொல்லுவதன்றிக் கூடுமானால் உன்னாலான சகாயத்தையுஞ் செய்யாயேல், நீ இரக்கமுள்ளவர்களிலொருவனாகவைத் தெண்ணப்படாய்; எண்ணப்படாய், 82

பிடித்தவர் கட்கெலாம் பிள்ளையாய்ச் சுமந்துபெற்றெடுத்ததா யிவளென வோண்ணு மனமே!

உனக்கும், உன் மானத்திற்கும், உன் பொருளுக்கும், கஷ்ட நஷ்டங்கள் வரக்கூடிய காரியங்களி லன்றி, உன் கட்டளையை யேற்பவர்களாகிய மனைவி, மக்கள், சகோதரர், சிநேகர், மாணவா, வேலைக்காரர் முதலியவர்களை நிஷ்பிரயோஜனமான காரியங்களி லெல்லாம் பரீக்ஷிக்க முயல்வது விருத்தமாம்; விருத்தமாம். 83

ஏதாவது வியவகாரத்தைத் தீர்க்கும் பொருட்டு யாராவதுன்னை மத்தியஸ்தர்களிலொருவனாக வாவது, உன்னை மாத்திரமாவது கோரிக்கொள்வார்க ளானால், கட்சிக்காரர்க

ளின் நேர்மைகளையும், வியவகாரத்தின் விவரங்களையும், நன்றாய்த் தெரிந்துகொண்டு, "வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே, பாதாள மூலி படருமே - மூதேவி, சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே, மன்றோரஞ் சொன்னார் மனை" என்னுஞ் செய்யுட் கருத்தையே ஊதியமாகக் கொண்டு, வேறாதியத்தை நினையாது செய்யும் மத்தியஸ்தமே செய்யத் தக்கதாம்; செய்யத்தக்கதாம். 84

எக்காரணத்தைக் கொண்டாவது அறிவுடையார் உன்மீது கோபித்துக் கொள்ளுங் காலத்தும், யாதாவதொரு வியவகாரத்தைப்பற்றிப்பேசுங்காலத்தும், சமாதானமும் நியாயமுமிருந்து விஷயத்தைத் தைரியமா யெடுத்துக் காட்டின், அவர்கள் ஒப்புக்கொள்வதோடு, உன்மீது முன்னினு மதிகப் பிரீதி வைப்பார்கள். இப்பிரீதியைத் தற்பெருமை யாளரான மூடர்பால் பெறவேண்டியதாயின், அவர்கள் நிரதுவாய்க்கோபித்துக் கொள்ளுங் காலத்தும், தாம் பிடித்த முயலுக்கு மூன்றே காலென மூடப் பிடிவாதம் பேசுங்காலத்தும், மௌனஞ்சாதித்தலே முறைமையாம்; முறைமையாம். 85

தக்க அந்தஸ்தை வகித்திருக்குங் காலத்தில் சிறிய காரியத்தைச் செய்யப் புகுந்தா

னும் அதற்கேற்றபடி பெரு முயற்சியுடன் செய்யக் கடவாய்; இல்லையேல், நஷ்டக்கேடு அவமானமடைவா யென்பதை யறிவாய்; யறிவாய், 86

உன்னை எதற்காக வொருவன் அடுத்தானோ, எதற்காக நீ சம்மதித்தாயோ அதை நிறைவேற்றி வைப்பது மாத்திரம் நங்கடனென்றிராது சகல விதத்திலும் அவனை யோக்கியனாக்குவிப்பதே உன் பெருங் கடமையாம். அப்படி யாக்குவிப்பதற்குமாறாக, யாதாவதொரு வைராக்கியம், லாபம், கோபம் இவைகளை முன்னிட்டு யோக்கியனையும் அயோக்கியனைக் கப் பார்ப்பது தகுதியாகாது. அவன்மேலுனக்கும் அநேகப் பிரியமுண்டாயினும், சமயம் வந்தபோது நம்மீதும் இத்தகைய அயோக்கியதையைக் காட்டுவானோ வென்னுஞ்சந்தேகப் பேய் சதாவுன்னைப் பிய்த்துப் பிய்த்துத் தின்னுமாதலால், முதலிலேயே அத்தகைய முயற்சிக்குள் ஆளாக்கா திருப்பதுவே அறிவாம்; அறிவாம். 87

தாட்சண்யம், தற்கால லாபம், ஜீவனம், சாமர்த்தியம் முதலியவற்றை முன்னிட்டு உன் மனசாட்சிக்கு விரோதமான செயல்கட் குட்படுவாயாகில், "தெய்வமுள தென்பார் தீய செயப்புகின், தெய்வமே கண்ணின்று நின்

ஞுறுக்கும்" என்றபடி துன்பத்திற் காளாவ துண்மையாம்; உண்மையாம். 88

சிரங்கொடு பயித்தியஞ் சேர்ந்தழற் கொள்ளிகோ
குரங்கையே நிகர்த்த கோதுறு மனமே! [ள்

அற்பன் உன்னைக்காரணமின்றிக் கஷ்ட நஷ்டங்கட்கு உட்படுத்த முயல்வானாயின், அவைகளைப் பொறுத்துக் கொள்வாய். அத்துலவன் கடவுள் தண்டனைக்குத் தப்பாதாளாவான். பொறுப்பதற் கியலாததாயின், 'நெல்லாலடித்தவனைக் கல்லா லடிப்பது நீதியா' மென்பது போல எவ்விதத்திலாவது அவனுக்குப் புத்திவரப் பண்ணுவது புண்ணியமாம்; புண்ணியமாம். 89

உனக்குச் சொந்தமான பணத்தையாவது ஏதாவதொரு பொருளையாவது உன்னுபத்திற்கு, அல்லது உனக்குத் தேவையானபோது உதவக்கூடிய உத்தமர்களிடம் அடைக்லமாக வைத்து வையாது, "வைக்கத் தெரியாது வைக்கோற் போரில் வைத்து" வருந்துவானைப் போலக் கேட்டபோது சாக்குப்போக்குகளைச் சொல்லுவா னிடமும், தனக்கநுகூலமானபோது கொடுப்பானிடமும், கிடைத்ததேலாப மெனச்சாப்பிட் டேப்பமிட்டு உன்றலையிலோட்டைக் கவிழ்ப்பானிடமும், கொடுத்து வைப்ப திடுக்கணுக்கு இடமாம்; இடமாம். 90

தேகத்திற்கு அல்லது குடும்பத்திற்கு வியாதி அல்லது ஆபத்துக்கள் வருவது இயல்பாம். ஆபத்து உன் விரோதிக்காவது அவன் குடும்பத்திற்காவது நேர்ந்தக்கால், என்னையவனிப்படிச் செய்தான்; அதனாலவனுக் கிப்படிப் பட்ட ஆபத்துவந்ததென்று பல்லோரிடமும் சொல்லி மகிழ்வது மடமாம், மடமாம். 91

நின்போன்ற குடும்பிகட்குப் பயந்து சமுசாரத்தை (வாழ்க்கையை) யும், ஆப்தநண்பனுக்குப் பயந்து நன்னடக்கைகளையும், உனக்குச் சாதகமாயுள்ள கல்வி, அல்லது கைத்தொழில்,வர்த்தகம்,உத்தியோகம்முதலானபல வகை ஜீவனங்களையும், நீமேற் கொண்டது போல, உன்னை நிகர்த்து உனக்கு விரோதிகளாயுள்ளவர்கட்குப் பயந்து நடத்துவதிலும் சற்றுத் தவறுவையேல், அவமானப் பலனையே யடைவாய்; அடைவாய், 92

எக்காரியத்திற்கும் எக்காலத்தும், உன்னை எதிர் பார்த்திருக்கத் தகுந்த உன்மனைவியின் சம்மதத்திற்கு எதைக் குறித்தும் எக்காலத்தும் எதிர் பார்ப்பதையே பெரும் விரதமாகக் கொண்டிருப்பையேல், அடிக்கடி கஷ்டநஷ்டங்கட் காளாவதன்றி, எல்லாராலும்நீ ஆண்மகனென்று சொல்லப்படாய்; சொல்லப்படாய்.

உனக்குள்ளே கூசுதலாயும், கௌரவத்திற்கு ஹானியாயும், என்றென்று மாறாதவெட்கத்தைத்தருவதாயும்பந்துமித்திரர்முதலானவர்கள்தூஷித்தற்கேதுவாயுமுள்ள காரியங்களைச் செய்யாதிருத்தலே திருத்தமாம். செய்த பின் யாராவது ஏளனஞ் செய்வாராயின், அதைப் பொறுத்தலே பொருத்தமாம். பொறாது கோபித்தாலாவது, அதற்குப் பொருந்தாச்சமாதானங் கூறுதலாவது குறைவாம், குறைவாம். 94

எழுத்துமூலஞ் சாட்சி முதலான ருசுக்களின்றி யாதொரு தாவாவிற்கு முட்படாத ஏதாவதொரு பொருளை அல்லது பத்திரத்தைப் பத்திரமாய் வைத்து வைத்து வேண்டும்போது கொடுவென்று யாராவதுன்னிடம் அடைக்கலமாகவைத்தால், கொடுத்தபோது மென்று அபகரிக்காதிருப்பதோடு, வைத்தவன் (கொடுத்தவன்) இறந்தால் அவன் வாரீசுகட்கும், நீயிறந்தால் கொடுத்தவனுக்காவது அவன் வாரீசுக்காவது உன் வாரீசுக்கள் கொடுத்துவிடும்படி ஏற்பாடு செய்து வைப்பாயாயின், உன்னைக் கலியுகமநுவெனக் கழறுவர்; கழறுவர் 95

எல்லா நலனுமுள்ளபோதே கர்மித்தனத்தை வகிக்கப் பழகாது, பஞ்சணையிற் றுயில்வதே பழக்கமாயினும் ஒவ்வொருகால் தரையிற் படுக்கத்தானே பழகலும், பல்லக்கேறும்

பாக்கியம் பெறினும் பாத சாரியாய் நடக்
கப் பழகலும், பற்பல வுடைகள் பாங்கா
விருப்பினும் சாதாரண வுடை தரிக்கப் பழக
லும், அறுசுவை யுண்டி யருந்துவதாயினும்
சுவையறு முண்டியை துய்க்கப் பழகலும், வா
சனையே கொள்ளும் வழக்கமாயினும், துர்வாச
னைக்குச் சுளிக்காப் பழக்கமும் "தறுகணைம்
புலன்களுக் கேவல்செய்யுறுச்சதுரி"னைப் பெற
முயலுங் காலத் துதவியாம், உதவியாம். 96

பெருமையுஞ் சிறுமையும் பிரித்துணர் தற்கிலா
வொருமையிற் கால மொழிக்குநன் மனமே!

உன் நண்பன் முதலானவர்கட்கு வேண்
டிய யாதொரு பொருளை வாங்குதற்கு அச்சம
யம் தம்மிடம் பணமில்லாது, உன்னைச் சாமீ
னாக வைத்தாவது உன்னிடங்கடன்பெற்றாவது
வாங்கி அப்பொருளைஉன்னிடங் கொடுத்துவை
த்தாலும், உன் மீது பத்திரம் எழுதிவைத்தா
லும், குறித்த காலத்திற்குள் உன் கடனைக்
கொடுக்கச் சற்றுத் தாமதித்தாலும், அப்பொ
ருளுனக் கவசியமாயினும், வாங்கிய காலத்து
விலையை விட உன்னிடத்திருந்து மீட்டுக்கொ
ள்ளுங் காலத்துஅதுஅதிகவிலை பெறுமானதா
யினும், அதற்காசைவையாதுஇஷ்டமிருந்தால்
கொடுத்தகடனை வட்டியுடன் பெற்றுக்கொண்
டு அப்பொருளைக் கொடுத்து விடுவது தான்
குணமாம்; குணமாம். 97

நீ மிதமற்ற கல்வி செல்வங்களையுடைய வனுயின், அபலமான காரியங்களில் கல்வித்திறமையைக் காட்டிச் சபலபுத்தியுடையோர் மெச்சும்மெச்சுதலுக் காசைவையாது, உலகோபகாரமான உயிர்க்குறுதியான நூல்களை யியற்றுவதும், அத்தகையபழைய நூல்களைவெளியிடுவதும், அன்றி, செல்வங்களைவீண்காரியங்களில் செலவிட்டு வீணர்களுள் சிலரால் சில நாளைக் குத்தாராளத் தன்மையுடையா னென்று பெயரெடுப்பதைக்காட்டிலும், புசிப்பைப்பசித்தோர்க்கிடும் புண்ணியனென்றும், அடுத்தாரை விருத்தியாக்கு மருள் வள்ளலென்றும், உலகமழியினு மழியா வுண்மைத் தருமங்களை நிலைநாட்டி வைத்த உத்தம னென்றும், யாவராலும்எக் காலத்தும் சொல்லப் பெறுவதுமே, இறந்தும் இறவாத்தன்மையனென் றேத்தப்படும் புகழ் பெறுவதற்குக் காரணமென் றெண்ணுவாய்; எண்ணுவாய், 98

குடும்பங்களில் பலியோடு (ஜீவஇம்சை செய்யக்) கூடிய சிறு தெய்வங் கும்பிடுங் காலங்க ளடிக்கடி நேரிடுவதியல்பாம். உன்குடும்பத்தி லப்படிப்பட்ட சம்பவங்கள் நேரிடுங் கால் உன்னுலானவரையில் ஜீவஇம்சை செய்வதைத் தடுக்கப் பார்ப்பதுவே தருமமாம், தருமமாம். 99

குடும்பம், உத்தியோகம், வர்த்தகம், தொழில், நட்பு முதலானவைகளில் பொருமையால், நிரோதுவாகக் கோள்க ளேற்படுவது சகஜம். அவற்றை நம்பினோர் எதிரியைக்கெடுத்த தன்றித் தாமுங் கெட்டு அவமானமும், நஷ்டமு மடைந்ததைக் கண்டு கேட்டுள்ளா யானதால், கோளுக்குங் காதைக் கொடுப்பதுகுறை
வாம்; குறைவாம். 100

“தந்தையறிவு மகனறிவு”, “தாயைப் பார்த்துப் பெண்ணைக்கொள்”, “தாய்வழி மகள்”, “குலமாட்சியில்லாருங் குன்று போனிற்பர், நலமாட்சி நல்லாரைச் சார்ந்து”, ‘குலத்தளவேயாகுங்குணம்’, “தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக், கற்றனைத் தூறுமறிவு”, “தான் கற்ற நூலளவேயாகுமா நுண்ணறிவு”, “திருவுண்டானபோதே திறமையுண்டாகும்” என்னும் வாக்கியங்களின் பயனுக்குமாறாகத் தந்தைக் குண்டாங் குணம் மகனுக்கின்றியும், தாய்க் குண்டான நடை மகளுக் கில்லாமலும், தண்ணீரிற் கிடக்குங் கருங் கல்லைப்போல நல்ல சகவாசத்தை யுடையவன் நண்பன் செய்கைக்கு மாறுபட்டும், மேலாஞ் சாதியிற் பிறந்தும் அதற்கேற்றவொழுக்கமுதலியவைகளின்றியும், சகலகலாவல்லா னாகியும் இது தக்கது இது தகாதது என்னும் பகுத்த

றிவில்லாமலும், நிறைந்த பொரு ளிருந்தும் அதனை லடையவேண்டிய பலனைப் பெறாது எதினும் எக்காரி யத்திலும் பிரயோஜன மின்றி ஈடழிந்து நிற்கு மநேகரைப் போல, குருவிற்கு மாறான மாணவனும், பர்த்தாவிற்கு மாறுபட்ட பாரியையும், எஜமானனுக்கு நேர் முரணான ஏவலனும், சகோதரனுக்கொவ்வாத சகோதரனுமுள்ளாராதலின், இவர்களிடம் சகல விதத்தும் கூடிப் பழகாது ஒருவரைப்பார்த் தொருவரை நம்புவாயாயின், சஷ்ட நஷ்டமே கைகண்ட பலனுமென்பதைக் கருதுவாய்; கருதுவாய். 101

மாளாத் துயர்தரும் மாண்பில் மனமே!

உண்மைஞானியும், ஓயாக் குடியனும், பணங்காக்கும் பூதத்தையும் வாயிதாப் பணத்தைச் சுமக்கும் வெட்டியானையும், ஒத்த பணவாசை யுடையவனும், நிர்மூடனும், நீக்க மில்லாச் சூதாடியும், முறைகடந்த காமியும், முழுத்தரித்திரனும், தன்னை யறிந்தவரில்லா விடத்தி லகப்பட்டுக் கொண்டவனும், பிறர் காரண மின்றிச் செய்த குற்றத்தைக் குணமா கவும், அவமானத்தைக் கௌரவமாகவும், அவ னவனியற்கைக் குணத்திற் கேற்றபடி கொள் ளுவது இயல்பாம்; இயல்பாம். 102

இஷ்ட ஜனங்களான ஆண், பெண் களில், எவரிடத்தாவது விரோதமான பிறகு காலம் வந்த போதாவது, மத்தியஸ்தர் மூல மாவது, வலியவாவது சிநேகம் அல்லது உறவு கொள்ள இஷ்டமிருந்தால், அப்படிப் பட்டவர் கள், காரணமாகவோ, அகாரணமாகவோ, உன் னைப்பல அவமானஞ் செய்யினும், அவஸ்தைக் குள்ளாக்கினும், "குற்றம் பார்க்கிற் சுற்றமில் லை" என்பதை யெண்ணி, பதிலுக்குநீ அவர்களை யாதொரு அவஸ்தைக்கு உள்ளாக்காமலும், அவர்கள் செய்த குற்றங்களை யாருடையசெவி யிலு மேற்றாமலு மிருப்பதே ஏற்றமாம்; ஏற் றமாம். 103

நீ கஷ்டப்பட்டுத் தேடிய (சுயார் ஜித) பொருளால் அல்லது முன்னோர் தேடி வைத்த (பிதுரார்ஜித) பொருளால் விரும்பிய தான தருமங்களைச் செய்து புண்ணியத்தைப் பெற வேண்டுமே தவிர, அன்னியன் பொரு ளை மோசஞ் செய்தாவது, உனக்குச் சக்தியிரு ந்தும் அது மீதிப்பட மற்றவரைத் தட்டிக் கொடுத்துத் தான தருமங்களைச் செய்து, இது என்முயற்சியால் தான் நிறைவேறியது என்று சொல்லி மகிழ்ந்து, புகழையும் புண்ணியத்தை யும் பெற வெண்ணுவது, கடைத்தேங்காயைத் திருடி அல்லது ஏமாற்றி வாங்கி வழிப்பிள்ளை யாருக் குடைத்ததை ஒக்குமாம், ஒக்குமாம்.

உன் பந்து, மித்திரன், ஆசிரியன், எஜமானன் இவர்களிடத்து, ஒருவன் உன் பொர்சாலாவது தானாகவாவது உனக்குப் பின் பந்துவாகவும், மித்திரனாகவும், மாணவனாக வும், வேலைக்காரனாகவும், அமைந்தானாயினும், அவனது அதிர்ஷ்டத்திற்கும், அவனாலாகு மநுகூலத்திற்கும், அவனடக்கைக்கும், அப்ப ந்து மித்திரர் முதலானவர்கள் மகிழ்ந்து, உன் மீது வைத்திருக்கும் பட்சத்தினும் பதின் மட ங்கு அவன் மீது வைக்கக் கண்ட காலத்து, நீ பொறாமைப் படுவது பொருந்தாததாம்; பொ ருந்தாததாம். 105

எஜமானன், நண்பன், பந்து, மாண வன், வேலைக்காரன் இவர்கள் உனக்குத் தே வையான காரியங்களில் தேர்ச்சி யடைந்தவர் களாகவும், உனக்கு மாத்திரம் சம்மதியான ஒழுங்கீனமான காரியங்களில் சம்மதமுடைய ர்களாகவும், உனக்குத் தேவையில்லாத வுத்த மக் காரியங்களில் மூடர்களாகவு மிருப்பார்க ளென் றெண்ணுவது அறியாமையாம்; அறியா மையாம். 106

எந்த வியவகாரத்தையும், நியாய வாயி லாய் ஜயம் பெறுதற்கு லாக் (நியாய நூல்) களும் நிதித்தலங்களும் உண்டாயிருப்பினும்,

கடவுள் தயை, பணம், பொர்சு, சாட்சிமுதலிய உதவிகளில்லாவிடத்து ஜயம் பெறுவது துர்லபம்; துர்லபம். 107

நீக்கமற்ற சிநேகிதர்கள் பங்காளிகள் கொண்டான் கொடுத்தான் முதலிய பந்துக்களென்னு மிவர்களுள் யாரேனு மொருவரது யாதாவதொரு காரணத்தைக்குறித்துக்கர்ணகடூரமான வார்த்தைகளாலும், இரத்தமயச் சண்டைகளாலும்விரோதமுண்டாய காலத்து, நீ அவர்கட்குச் சிநேகிதனயினும், பந்து வாயினும், ஒருவருக்காகப் பரிந்து மற்றொருவரைப் பேச்சு மூலமுதலியவற்றால் நீயும் விரோதித்துக் கொண்டால், அவர்கட்குளிருந்த அந்தரங்க வொற்றுமைகளாலும், வேறுவிதமான பலன்களை முன்னிட்டும், "தோன்றவநேகம்பெறினுந் தொன்னட்பிற்சிறந்தனவோ" என்பதையெண்ணியும், "பிறப்பிற்குக் கசப்புண்டா" "தண்ணீரை யடித்தால் தண்ணீர் வேறாகுமா" வென்பதுபோலும், தாயாதிகளைக் கூட்டுவிக்க வொரு நியாயாதிபதியும் வேண்டுமா வென்பதை யெண்ணியும், "கொண்டானுங் கொடுத்தானு மொன்றாய்ப் போனல் கூடவிருந்தவன் விரோதியா (தூரமா) னன்" என்னும் பழமொழியையும் யெண்ணிப் பார்த்து அவர்கள் ஒற்றுமையாய்ப் போனபோது, நீ ஒருவனே இருதிறத்தி

னருக்கும், அருவருப் புடையவனுவா யானதா லும், அவர்கள் விரோதமா யிருந்த காலத்தில் அவர்களுக்குள் ஒருவரை யறியாமல் ஒருவர் உன் முன்னிலையில் வைததைவைகளை அவர்கள் ஒற்றுமைப்பட்டகாலத்தில் இவரிப்படிப் பேசினுர் அவரப்படிப் பேசினு ரென்று அவர்களிடஞ் சொன்னுல் அதுவுங் குற்றமாகவே முடியுமானதாலும், அப்படிப்பட்ட சமயங்களில் உன் அறிவைத் திரப்படுத்தி இருதிறத் தினர்கட்கும் மனநோயுண்டாகாதபடி நடந்துகொள்வதே இனிதாம்; இனிதாம். 108

நமக்கொருவன், எக்காலத்தும். எல்லா விதத்திலும் தாழ்வுபட்டே யிருக்கவேண்டும்; அவன் குடும்பத்திலும், உத்தியோ (லௌகி)கத்திலும், உறவினரிடத்தும், ஊராரிடத்தும் சதா விரோதப்பட்டே யிருக்க வேண்டும்; எவ்விதத்திலும் அவன் சௌக்கியமடைவது கூடாது; தெய்வாதீன மாகவாவது, தன் கஷ்டத்தாலாவது அவனடையும் பலன் தட்டுக்கெட்டுத் தடுமாறியே போகவேண்டும்; அப்படி தடுமாருவிடின் அவனை யறியாது எப்படியாவது தட்டிவிடப் பார்க்க வேண்டும்; அதனை மீறியும் ஐயமுண்டாவதாக விருந்தால் "மகன் செத்தாலுஞ் சாகட்டும் மருமகள் கொட்ட மடங்கினுல் போதும்" என்பது போல நமக்குப் பாபம்

அல்லது பழிவந்தாலும் வரட்டும், கூடுமான வரையில் அதைத் தடுத்து விடுவதே நம்கடனுமென்றெண்ணி முற்படுவாயாகில், அறிவுடையார் காற்கடை கொண்டொதுக்கிய வீணர் கூட்டத்தின் பிரதிநிதியாகப் பிரகாசிப்பாய்; பிரகாசிப்பாய். 109

இக்காலத்தில் குடத்திலிட்ட தீபம்போல அடங்கிக்கிடக்கும் தெய்வத் தன்மைபொருந்திய தமிழ்ப்பாஷையைத் தலைகீழாகப் படித்தவனுக்குத் தடுக்கு ஆதனமும், சின்னாட்குமுன் இந்நாட்டிற்றோன்றி மலைமுடியிட்ட மணிவிளக்கென வொளிரும் ஆங்கில பாஷையை அவாவி நான்கெழுத்தோதினவனுக்கு நாற்காலி ஆதனமுங் கிடைக்கின்றன. அரனணியரவம் கரியனும் நாரணன்பரியாய கருடனை நோக்கி "ஏன் கருடா" சுகமாவென, இருக்குமிடத்திருந்தால் சுகமேயென்று விடை தந்தவாறு, காலபேதத்தாற் பெருமை பொருந்திய ஆங்கிலத்தின் பயிற்சி அற்பமேனு மில்லாதவன் அடையும் பெருமை அற்பமு மில்லையாம்; இல்லையாம்.

யாதாவதொரு விஷபத்தை ஒருவரிடம் சொல்லுங்கால், அவ்விஷயத்திலோ, விஷபத்திற்குக் காரணமானவர்கள் மீதோ, காரணமானவைகள் மீதோ, சொல்லப்பட்ட உன்னை முன்னிட்டோ, கேட்போர் அருவருப்புடனிருக்கி

ஞர்க ளென்பதைக் குறிப்பா லுணர்ந்த பிறகும் தொணு தொணு வென்று தொணுப்புவது, தாய் தன்றும்; தாய்தன்றும். 111

யாதாவதொரு காரியத்தைக் குறித்து, ஒருவருடைய வேண்டுகோட்குட்பட்டுப் போய்வர நேரிட்டபோது வண்டிச் செலவு வழிச் செலவு முதலியவைகளை அவர் கட்டாயங்கொடுப்பார்களெனத் தெரிந்தாலும்,சொன்னாலும், போய்வர நேருஞ்செலவுக்காக உன் சொந்தப் பணத்தைக் கைக்காவலாகக் கொண்டுபோவதுன் கடனும்; கடனும். 112

வஞ்சனைச் சோற்கே வாயங் காந்து
செஞ்சோலை நஞ்செனச் செகுத்திடு மனமே!

உனக் கனுகூலமான காரியத்தை அல்லது ஒரு பொருளை உள்ளே விருப்பாகவும் மேலே வெறுப்பாகவுங் காட்டி, யாரையாவது முன் தள்ளி எதையாவது சாக்கிட்டு நிறைவேற்றிக் கொள்வது அல்லது பெற்றுக் கொள்வது போலப் பிறர் முயற்சிப்பார்களாயின், அதுபற்றி உல்லங்கனமாக ஒன்றுங் கூறுதிருத்தலே உணர்வாம்; உணர்வாம். 113

அறிவுடையாரிடத்து ஏதாவது நேரில் பேச நேரிட்டபோதும், கடித மூலமாகத் தெரிவிக்கும் போதும் விஷயத்தை விளக்கமாக

வும் சுருக்கமாகவும் சொல்லுதல், அல்லது எழுதுதல் நன்றும். நூதனமான விஷயத்தை மாத்திரம் அறிவுடையார்க்கும் படிப்பில்லாதார்க்கும் விரிவாய் விளக்கமாய்த் தெரிவித்தல் உத்தமமாயினும், "அப்புறம்" "அப்புறம்" "வந்து" "வந்து" "தெரியுதா" "தெரியுதா" "கேட்டையா" "கேட்டையா" என்னும் சொற்களை இடமல்லாத விடத்திலெல்லாம் விருதாவாக இணைத்துத் தெரிவிப்பது கேட்போர்க்கு அருவருப்பையும் காலப்போக்கையு முண்டாக்குமானதால், பேசுங் காலத்தும், எழுதுங்காலத்தும், முக்கியமான வற்றைக் கவனித்தலே உசிதமாம்; உசிதமாம். 114

நீ எங்கெந்தப் பொருளை உடையவனாக விருக்கிறாயோ, அவ்வினத்தைச் சார்ந்ததாய் அச்சமய முன்னிடத்தில் இல்லாத பொருள்கள் (அஃதாவது ஆபரணங்களை யுடையவனாயிருந்தும், உன்னிட மில்லாத ஆபரணமும், பல புத்தகங்களை யுடையவனாக விருந்தும் உன்னிட மில்லாத புத்தகமும்) உன் சிநேகிதர் முதலானவர்களிட மிருக்கக் கண்டு, நீ இரவல்கேட்டால் ஒருகால் கொடுப்பார்க ளன்றி, நீ முதற்றர யோக்கியனாயினும், ஆணைகடவாத அரிச்சந்திரனாயினும், பிறர் பொருளைத் துரும்பெனநினைக்கும் பிரபந்நனாயினும், இவவிதக் குணங்

களை யுடையவனை யென்று உன்னை யாவரும் நன்கறிந் திருப்பாராயினும், நேரிற் புகழக் கேட்டிருப்பாயாயினும், "ஈங்கொருவுதவிவெஃகா தெவருமோ ருதவி செய்யார்" என்ற வாக்கியப் பயனையே யெதிர் பார்ப்பா ரதிகமானதால், அவர்கட்கு ஒருகால் உதவக்கூடிய பொருள் உன்னிடத் தில்லாதபோது அவர்களிடத்துள்ள உனக்கவசியமான பொருளை இரவல் கேட்டால், கொடுப்பது துர்லபம் ஒரு சமயம் ஒருவர்க் கொருவர் பழகிய பழக்கத்தால், விதியின்றிக் கொடுக்க நேரிடினும், மற்றொரு கால் அப்படிக் கேட்காதிருப்பதற்காகத் தம் மீது பழியைச் சுமத்திக் கொள்ளாமல் தம்மைச் சார்ந்தவர்கள், அல்லது தம் குடும்பத்தினர்களின் அபிப்பிராய மின்ன தின்னது என்றுதகுந்த பற்பல தந்திர வார்த்தைகளாகிய சொட்டுச் சொற்களுடன் கொடுப்பார்களானால், மறுபடியும் அப்படிப் பட்டவர்களிடம் ஒன்றையிரவல் கேட்பது, முன்னிருந்த வொற்றுமைக் கீனமும், அவமானமும் வருத்தமும் உண்டாவதற்குக் காரணமானதால், எப்பொருளையும், இரவலாய்க் கேட்பதே ஈனமாம்; ஈனமாம் 115

தகுந்த வேற்பாட்டின் மீது குறைந்தவட்டிக்குக் கடன் கொடுத்தலும், வாங்கலும் உத்தமம். அதிக வட்டிக்காசைப்பட்டுக் கொடுப்ப

தும், அவசரப்பட்டு வாங்குவதும், குறைந்த வட்டிக்குக் கொடுத்திருப்பதைத் துரிதஞ்செய்தாவது கஷ்டப்படுத்தியாவதுவாங்கி, மிதப்பக் கூறி வட்டி வாங்குவதும், "காணியாசை கோடிகேடு" என்பது போல வட்டியும் முதலும் வந்து சேர, அல்லது கொடுக்க, வழியற்றுப் போமென்பதை வகையுடன் காண்பாய்; காண்பாய். 116

உன் சுவாட்சணைக்கு உட்பட்டவர்கள் உன் தலைமைக்கு அல்லது, உன் மரியாதைக்கு, மானுஷீகத் தன்மை மாறுபடாமல் மரியாதையாய் நடந்து கொள்ளுகிறார்களென உனக்குத்தோற்றும் பட்சத்தில், நீ உன் தலைமைமுதலியவற்றைப் பெருமையாய்க் காட்டாது, நீ அவர்கள் முன் மரியாதையாய் நடந்து கொள்வதே உன் தலைமை முதலியவற்றின் விருத்திக்கும், அவர்களின் நன்மார்க்க விருத்திக்கும் காரணமாமாதலால், சற்றேனு மிவற்றிற்குத் தப்பாதுன் கவனத்தைச் செலுத்துவது கண்ணியமாம்; கண்ணியமாம். 117

யாராவது யாதாவதொரு விஷயத்தைக் குறித்துனக்குக் கடித மூலமாய்த் தெரிவிப்பார்களானால், அவ்விஷயம் முடிவு பெறுவதற்குள் அதனைக் கிழித் தெறிவதும் கைசோரவிடுவதும் நலமன்றும்; நலமன்றும். 118

குருமொழி கொண்டு குறையினின் றகன்று
ஒருவழிப் படாம லுலாவிவாழ் மனமே!

உன்னைப் பரீக்ஷிக்கும் பொருட்டு, யாரா வது குடும்பத்திலோ, சிநேகத்திலோ, மற்றெ தனிலோ, உள்ளே விருப்பம் வைத்து மேலு க்கு வெறுப்பாகவும், வெறுப்புவைத்து விருப் பாகவும், தூஷித்துப் பேசுதலும், பூஷித்துப் பேசுதலும், வழக்கமெனக் கண்டிருக்கும் நீ, அவர் வெறுப்பாகப் பேசுங்கால் வெறுப்பாக வும், விருப்பாகப் பேசுங்கால் விருப்பாகவும், சொல்லின் போக்கைக் காணாது, நீயும் அவரு டன் கலந்துகொண்டு பேச முற்படுவாயாயின், உன்மதிகெட்டினளவை, இவ்வளவென மதி த்து, உன்னை மதியா ரென்பதை மதிப்பாய்; மதிப்பாய். 119

போட்டா போட்டி, அல்லது கலகப்பட் டுள்ள குடும்பச் சொத்துக்களை, இலாபத்தை முன்னிட்டாவது, வேறெக்காரணம் பற்றியா வது வாங்குவதும், இனத்தாராக விருந்து, பெண்கொள்ளல் கொடுத்தல் செய்வதும் பிசகாம்; பிசகாம், 120

அதிர்ஷ்டமும், ஆயுளும், தேகாரோக்கி யமும், துணைவலியும், எப்படிப் பார்க்கினும், உன்பார்வைக் கெட்டாமல் வெகு தூரத்திலிரு

ப்பதால், உன்வசமாகநின்ற பணமொன்றனை யே நம்பி, அடாத காரியங்களையே இடைவிடாது செய்வதை விடுவாய், விடுவாய். 121

நீ பிரபுவாயிருந்து விசாலமான வீடுகட்டி அதன் ஒரு பக்கத்திலாவது மேல் வீட்டிலாவது பணம், ஆபரணம், பத்திரம் முதலானவைகளை வைத்துக்கொள்ள ஏற்படுத்திக்கொண்ட ஓரறையில் உன்னுத்தரவின்றி, குடும்பத்தாராவது வேலைக்காரர்களாவது வராதபடி கட்டுப்பாடு செய்து, நீ மாத்திரம் தனியே யிருக்க இஷ்ட மிருந்தாலும், உன் வீட்டி லிருப்பவர்களும் வேலைக்காரர்களும் நீ யிருக்கும் இடத்தைச் சேர்ந்தாற்போல் வந்து நடமாடுவது உனக்குப் பெருத்த அவமானமும், கௌரவக் குறைவுமா மென்று தோற்றினும், ஏறக்குறைய நீயிருப்பது அவர்கட்கும், அவர்களுலாவுவது உனக்கும், நீ பேசுவது அவர்கட்கும் அவர் பேசுவதுனக்கும், தெரியும்படியும், கேட்கும் படியும் செய்து வைப்பது, சமயா சமயத்தில் ஆபத் காலத்தில் அநுகூலமாம், அநுகூலமாம்.

உனக்கிருக்கும் ஆஸ்திகளை நினைந்து நினைந்து களிப்பதைவிட ஏற்பட்ட இருணத்தை (கடனை)த் தீர்த்து அதனாலடையுங் களிப்பே களிப்பெனக் கருதுவாய், கருதுவாய். 123

ஏமாறியபோது மந்திரவாதியை வாயில் போட்டுக்கொள்ளும் துர்த்தேவதையை வசியஞ்செய்து யாவர்க்கும் அஞ்சாது நடப்பானைப்போலத் துஷ்டத் தனத்தாலும், சொந்தத் தனத்தாலும் யாவரும் உன்னைக்கண்ட விடத்தும், பெயரைக் கேட்டவிடத்தும் அச்சப்படுகிறார்களா, பெருமையா யெண்ணுகிறார்களா வென் றெண்ண மிடுவதைவிட, பக்தியென்னும் பொரிசால் பரமேசனென்னும் தலைவனை பட்சமென்னும் அருளுக்குப் பாத்திரமாவது போல, நன்னடக்கை யென்னுஞ் சிறந்த செல்வத்தை விரும்பி நாட்டாரெல்லா முன்னை நல்லவனென்று சொல்ல வேண்டு மென்பதில் ஞாபகத்தைச் செலுத்தி நாளைக் கழிப்பதே நன்று, நன்று. 124

உன்பொருளுக்கு நஷ்டமும், உனக்கு அபகீர்த்தியும், இன்னார்வாயிலாக உண்டாயின, உண்டாகின்றன, உண்டாகும், எனயாராவது உனக்குத் தெரிவிப்பார்களானால், அது பொருமையாற் சொன்னதா, உள்ளபடியே சொன்னதா, என்பதுபற்றிச் சொன்ன ஆளைக்காண் பிக்காமலே விசாரித்து, பொருமையா லென் றேற்படின் சொன்னவனையும், உண்மையென் றேற்படின், குற்றவாளியையும் அதற்குத்தக்க

படியாயும், உன் அந்தஸ்துக் கேற்றபடியாயும், அவர்களைக் கண்டிப்ப தழகாம், அழகாம். 125

நீ கைத்தொழில் வைத்தல் முதலியவைகளால் ஜீவிப்பவனாக விருந்து யாராவது வேலை கொடுத்து நடத்திக்கொண்டு வருங்கால், சொந்தக்காரர்கட் குள்ள அவசரத்தாலோ, அறிமுகத்தாலோ, லாபத்தாலோ, அவ்வேலை தெரிந்த மற்றொருவனை உன்னோடு கூட்டி அவ்வேலையைச் செய்யும்படி செய்த காலத்தும், வர்த்தக முதலியவைகளில் உனக்குக் காவலாக ஒருவனை நியமித்தகாலத்தும், நமக்கு மேலொருவனை நியமித்தார்க ளல்லவா வென்னும் பொறாமையாலும், அப்படி வந்தவர்களால் உனக்கு லாபமில்லாத காலத்தும் அவர்களை அவமானப்படுத்தும் பொருட்டுச் சொந்தக்காரர்களை நஷ்டத்திற்குள்ளாக்குவது, நன்றன்றாம், நன்றன்றாம். 126

சபையில் ஒரு விஷயத்தைப்பற்றிப் பேச நேர்ந்தபோது தத்தம்பெருமை சந்தர்ப்ப முதலிய வற்றைக் கவனியாது ஆவலுடன் வந்திருக்கும் சபையா ரனைவரும் சந்தோஷிக்கு மாறு கொடுத்த அல்லது எடுத்துக் கொண்ட விஷயத்தைக் கூடுமானவரையில் உரத்தசப்தத்துடன் குறித்தகால வளவிற்குள்பேசி முடிக்க

வேலாதெனின், பேசாதிருப்பதே பெருமை யாம், பெருமையாம். 127

திரிமூர்த்திகள் முதல் தூசினுஞ் சிறிய சீவராசிக ளீறாக வுள்ள சகல பிராணிகளும் காமமென்னுங் கற்பாறையின் மோதிக் கலங் காதவர்கள் கிடையவே கிடையாராயினும், அன்னிய மாதர்களின் மீதுன் ஞாபகஞ் செல் லுங்கால் உன் தாய், தமக்கை, தங்கை, தாரம், புத்திரி இவர்களையும் நீ பார்த்துள்ள விருத் தாப்பியமும், அவலட்சணமும், அலங்கோலமு மான வியாதி நிறைந்த கிழங்களையும் உன்ஞாப கத்திற்குக் கொண்டு வந்து, முதலில் அன்னி யத்திலுன் ஞாபகஞ் சென்றமைக்காக ஆத்மா ர்த்த கடவுளை மன்னிப்புக் கேட்டுக் கொள் வாய், கேட்டுக் கொள்வாய். 128

பெண்கள் அன்னிய வாண் பெண்களின் சகவாசத்தாலேயே கற்பின்றலை நின்றுந் தவ றித் தடுமாற்ற முறுகிறார்களென் றெண்ண வேண்டாம். மகளைக்கெடுக்கு மாதாவும், மா தாவைப் பாழ்ப்படுத்து மகளும், தங்கையின் புத்தியைக் கெடுக்குந் தமக்கையும், தமக்கை யின் வாழ்வைப் போக்குந் தங்கையும், மருகி யை மயக்கும் மாமியும், மாமியை வழிவிடும் மருகியும் இப்படி ஒரே குடும்பத்தில் ஒருவ ருக் கொருவர் எமனாக விருக்கிறார்கள். இப்

படிப்பட்டவர்கள் உன் குடும்பத்திலும் உன் பந்துக்களிலு மிருக்கக் கூடும். அப்படிப் பட்டவர்களை விலக்கவாவது அவர்கள் நடைகளைப் பிறரறிய விளக்கவாவது கூடாத தாயினும், அவர்கள் வாசஞ் செய்யு மிடத்தை நரகலோக மெனவும், அவர்கள் கைப்பட்ட பண்டத்தைக் கடுவிஷ மெனவும், அவர்கள் பாவ வுருவங்களைப் பிரத்தியட்ச பிசாசுகளெனவும், எண்ணுவாய், எண்ணுவாய். 129

கடவுள், அரசன், குரு, எஜமானன், பெரியோர் இவர்கள் தயவிற்குப் பாத்திரனாக வேண்டு மென்னு மிஷ்டமிருந்தால், அடக்கத்தை யநுசரிப்பதுடன், தேக கஷ்டத்திற்கும் பொருள் நஷ்டத்திற்கும், பின்வாங்கினால் ஆகவே யாகாதென வறிவாய், அறிவாய். 130

முமுட்சுக்களின் வைராக்கியம் அநுகூலத்தையும் முழுமூடர் வைராக்கியம் பிரதிகூலத்தையும் கொடுப்பதாயினும், வைராக்கிய மென்னு மொன்றைச் செலுத்த இவ்விருதிறத்தினர்களால் சாத்தியமாமே யன்றி இவ்விரண்டு மல்லாத மத்திமர்கள் கொண்ட வைராக்கியம் வண்டைக்காய்க் குழம்பா மென வழங்குவாய், வழங்குவாய். 131

மந்திரியால் மன்னனுக்கும், மனைவியால் மணாளனுக்கும், தனயனால் தந்தைக்கும், தம்

பியால் தமயனுக்கும், மாணுக்கனால் குரு விற்கும், வேலைக்காரனால் எஜமானனுக்கும், பெருமையுண்டாகக்கூடுமானதால், யாரையும் அலட்சியஞ் செய்யாதிருத்தலே அழகாம், அழகாம். 132

ஒரு வியவகாரத்தில் அறிவாளிகளும், பொருளாளிகளும், படிப்பாளிகளும், நெருங்கிய பந்துக்களும், ஆப்தநண்பர்களுங்கூட ஒரு கட்சியிலிருந்து தங்கடமைகளைச் சாதிக்காமல் ஏதோவொரு காரணமாகத்தவறி விடுவார்களானால், பேராசையுடையவன், இலஞ்சம் வாங்குவோன், குடியன், கூத்திக்கள்ளன், மூடன், தரித்திரன், பழக்கமில்லாதவன், உட்பகையுடையவன் இவர்கள் தவறிவிடுவதற்குப் பின்னடையா ரென்பதைப் பெரிதும், எண்ணுவாய், எண்ணுவாய். 133

மதிப்புடைய ஸ்திரீயும் புருஷனும், தந்தையும் புத்திரனும், தாயும் பிள்ளையும், தமயனும் தம்பியும், தங்கள் தங்கள் சுபாவகுணத்தினாலும், சந்தோஷத்தினாலும், கோபத்தினாலும், ஆபத்தினாலும், ஒருவரையொருவர் அவமரியாதையாகப் பேசிக்கொள்வதுமுண்டாமாதலால், நீ சரேலெனப் போகக்கூடாத வீட்டிலிருக்கும் அப்படிப்பட்டவர்களைக் காணச் சென்றால் ஜன்னல் முதலான வழிகளால்

பாராமலும், குரல்கொடாமலும், தலைக்கடை (முன்றில்) முதலிய விடங்களில் நிற்பதை அவர்களை பார்ப்பார்களானால், நாம் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்தானென்னுஞ் சந்தேகத்தால் கூசுதலும், கோபமும் வரக்கூடுமானதால், உன் வருகையை அங்கிருப்பவர்களின் மூலமாக வேனும், யாருமில்லையேல் எச்சரித்தேனும் இருத்தலொழுங்காம், ஒழுங்காம் 134

உன் வீட்டிலிருப்பவர்களுடன் நீ மரியாதைக் குறைவாகப்பேச நேரிடின், வெளியே நம்மைக் கௌரவமாக நினைந்திருப்பவர்களின் செவியிற் பட்டாலென்ன நினைப்பார்கள் என்னும் ஞாபகத்துடன் பேசுவது தகுதியாம், தகுதியாம். 135

உன்னைக் காண யாராவது வருவார்களாயின், அவர்கள் வருகையை உடனே உனக்குத் தெரிவிக்கும்படி உன் வேலைக்காரர் முதலானவர்கட்குத் திட்டஞ்செய்து வைப்பது திறமையாம், திறமையாம். 136

புகழ்ச்சிப்பிரியர், தற்பெருமையாளர், முற்கோபிகள், கொடையாளர், என்னுமிவர்கள் கோபத்திற் கடங்கிப்போவார்க்குப் பலனுண்டாமென்று பகர்வாய், பகர்வாய். 137

உன் அற்பபுத்தியால், தம்பி, மனைவி, மகன், மகள், மாணவன், வேலைக்காரனென்னு மிவர்களைத் துணையாக அல்லது தூதாகக் கொண்டு பழிபாவங்கட்கு ஏதுவான காரியங்களைச்செய்யத் துணிவாயேல், அவர்கள் கெட்டுப்போவதற்கு நீயே வழிகாட்டி யாவதோடு அவர்கட்கு நீ அடங்கி நடக்கவும் நேரிடுமென்பதை அறிவாய், அறிவாய். 138

பறக்கும் பட்சிகள் எதனாலும் தடைபடாமல் குறித்தவிடத்தைச் சேருவதுபோலச் சாமர்த்தியத்தாலாகாத காரியமும் பிரியமான வார்த்தை யுடையவர்கட்குப் பகையும் இல்லையென்று எண்ணுவாய், எண்ணுவாய். 139

புட்பக்கொடிகள் தம்மருகிலிருக்கும் மரங்களின் மீது படர்ந்து அவற்றிற்கு அழகைக் கொடுத்தல் போல, அரசன், எஜமானன், குரு இவர்களின் தொந்தரவுக்குப் பொறுத்துச் சமீபத்திலிருந்து இதமாக நடந்து கொள்பவர்கள் இலாபத்தையும், பெருமையையு மடைவார்களென்று பேசுவாய், பேசுவாய். 140

ஒருவன்கேட்டுக் கொண்டபடி நீ சம்மதித்து, வாக்காலும், காயத்தாலும், காசாலும் செய்யத்தக்க சுவல்ப சகாயங்களையும், உனக்கிருக்கும் ஏதேதோ அசந்தர்ப்பங்களை முன்

ளிட்டு நீ செய்யத்தவறி விடுவதுபோல உனக்குச்செய்யச் சம்மதித்தவனும் அப்படித் தவறிவிடுவது சகஜமானதால், அதையே நீ ஒரு பெருங்குற்றமாகக்கொண்டு அவனை அருவருத்தல் அழகன்றாம், அழகன்றாம். 141

ஆயுதங்கள், வாத்தியங்கள், ஸ்திரீகள், உத்தமர்கள், புத்தகங்கள், பூமி ஆகிய இவைகள் பரிபாலனம் செய்பவர்களால் பிரகாசிக்குமென்பது பிரசித்தமாம், பிரசித்தமாம். 142

அன்புள்ளபந்துக்கள் முதலியவர்கள் வீட்டிற்குச் சாதாரண நாளில் நீ சென்றபோது உனக்கு நடக்கும் உபசரிப்பைப்போல விசேஷ தினங்களில் நடக்குமென எதிர்பார்ப்பது நன்றல்ல, நன்றல்ல. 143

உனக்குள்ள வியாதிகளின் தன்மைகளை விரிவாய் விவரமாய் வைத்தியனிடம் சொன்னால் அதிகப் பணம் கேட்பானென்று பயந்து உள்ளவியாதிகளை ஒளித்துச் சொல்லல் ஊனமாம், ஊனமாம். 144

ஒருவனிடம் எவ்வளவு அடுத்தடுத்துப் பழகினாலும் அந்தரங்கநடை உளவின்ரகசிய முதலியவைகளைக் கண்டுகொள்வது கஷ்டம். ஒருகால் கண்டுகொண்டாலும் ஆளறிந்து, அளவறிந்து, காலமறிந்து கண்டிப்பது அழகாம், அழகாம். 145

தெய்வபக்தி யில்லாதவனுக்குப் பயபக்தி யும், விதியை அங்கீகாரஞ் செய்யாதவனுக்கு விதிவிலக்கும், உலக வியவகாரமுதலிய சுக துக்கங்களைச் சுபாவமென்று உணராதவனுக் குத் துக்க நிவர்த்தியும் இல்லையாம், இல்லை யாம். 146

ஸ்திரீயைத் தக்கபடி காத்து அவள் மன தை எதனால் திருப்தி செய்யவேண்டுமோ அப்படிச் செய்து திருப்பாமல் "கூத்திக் கள் ளன் பெண்சாதியை நம்பான்" என்பதற்கேற்ப சதா சந்தேகங்கொண்டு இம்சிப்பதும், துட்டர் களோடு அளவிற்கு மிஞ்சி சிநேகிப்பதும், மூடனைச் சீடனாகவும், சிப்பந்தியாகவும் வைத் துக்கொள்வதும், ஒருவனுடைய குலம், நட வடிக்கைகளைத் தெரிந்துகொள்ளாமல் வீட்டில் சேர்த்துக்கொள்வதும் விபரீதமாம், விபரீத மாம். 147

தனவான் கெர்விப்பதும், தரித்திரனடங் குவதும், ஸ்திரீகள் துர்ச்சனர்கட்கு வசமாவ தும், ஞானியும், சூரனும், இருப்பையும், இறப் பையும் சமமாயெண்ணுவதும், கபடியை (விசு வாசகாதகனை) நேசிப்போன் கெடுவதும், சுபா வமாம், சுபாவமாம். 148

நீ பிரபுவாயின் உன்னினத் தேழைகள் வீட்டுப் பெண்ணைக் கொண்டு கொடுத்தல்

" தக்கவனொருவன் வாழத் தன்கிளைவாழும் "

" அழன்மண்டு போழ்தி னடைந்தவர்கட்கெல்லாம்
நிழன்மரம்போ லொப்பத்தாங்கிப் - பழுமரம்போற்
பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன் ".

என்ற முதுரைகளின் கருத்துக்கட் கேற்ப சகல அந்தஸ்திலும் அவர்களை உன்னைப்போ லாக்குவது தகுதியாம், தகுதியாம். 149

பிரசங்கம், உபந்நியாசம், ஏதாமொரு யோசனை முதலியன நடைபெறும் சபைகளில், நீ சிலரோடு,சள சளவென்று பேசுவாயானால் அச்சபையிலிருப்பவர்கட்கு இடைஞ்சலுண்டா வதன்றி உன்னைக் கெடுநினைப் புடையவ னென்றும், பொறாமை யுடையவ னென்றும், அருமை தெரியாதவனென்றும், மற்றவர்கள்சொல்ல நேரிடுமாதலால், பேச அவசியம் நேர்ந்த போது சபையைவிட்டு வெளியே வந்து விடுவது நல்லதாம், நல்லதாம். 150

உன்னுடைய நெருங்கிய பந்து, அத்யந்த சிநேகர், இவர்கட்காவது இவர்கள் குடும்பத்தினர்கட்காவது ஏற்படும் சுபாசுப காரியங்களை நீயே முதலாக நின்று நடத்த முயன்றபோது உன் வேலைக்காரர் முதலாயினோர்கட்கு ஷெடி பந்து மித்திரர்கள் அதிருப்தியைத் தரத்தக்க

வர்களாயின் உன்னோடு கூட கட்டுப் பாடாக விருந்து ஷெ சுபாசுப காரியங்களை நடத்தாமல் உன் வேலைக்காரர் முதலானவர்கள் பராக்குடையவர்களாகவே யிருப்பார்களென்பதை அனுபவத்திற் பார்ப்பாய், பார்ப்பாய். 151

தாழ்ந்த ஜாதியாரிடத்தில் போஜனம் பண்ணுவது ஜாதிப்பிரஷ்டமென்று நினைத்து ஆசாரத்தைக் காப்பாற்றும் நீ, உன்னாலெண்ணப்பட்ட அத்தாழ்ந்த ஜாதியானிடம் உன்னினத்தானும், உன்னினுயர்ந்தானு முண்ணுவதைப் பார்த்திருந்தும், அவரிடம் உண்ணைப் புகுந்த உன் ஜாதியும், ஆசாரமும் எப்பட்டும் நிலைத்தன வென்பதை எண்ணுவாய், எண்ணுவாய். 152

குல நலம், பண நலம் இவ்விரண்டும் ஒருவற்கு வாய்ப்பதரிது. இக்காலத்தில் பண நலமொன்று மாத்திரம் வாய்க்கப் பெற்ற குண நலமில்லாதவர்களும், உண்டானபோது கோடானு கோடி என்பதாக குல நல முதலான எல்லா நலங்களையும் சம்பாதிக்க முந்துகிறார்களென்பதைப் பார்த்திருக்கு முனக்கு பண நலமுண்டானபோது சோர்வு படாமல் குல நல முதலான எல்லா நலங்களையும் சம்பாதிக்க முந்துவாய், முந்துவாய். 153

கல்வி, செல்வம், ஜாதி, ஒழுக்கம், அன்பு, வஸ்திரம், இவைகளேயன்றி இன்னும் பல உனக்கிருக்கினும். ஒவ்வொன்றால் ஒவ்வோரிடத்தில் மதிப்புண்டாமாதலால் எல்லாவிடத்திலும் ஒன்றையே காரணமாகக் காட்டிக் கொண்டு போவது கனமல்லவென்பதைக் கடைப்பிடி, கடைப்பிடி. 154

உன் ஆன்மார்த்த கடவுளடியிற் பக்தியும் உன் தேகத்திற்கும், உன் குடும்பத்தினர்கட்கும் வியாதியும், ஆபத்தும், மரணமும், உன் ஆஸ்திகட்கும் குடும்ப போஷணைக் கேதுவான உத்தியோக முதலிய ஜீவனத்திற்குக் கெடுதியும் எந்த நிமிஷத்தில் உண்டாமோ என்றஏக்கமும், உன் னுள்ளத்தில் சதா குடிகொண் டிருக்குமானால் உன் பகைவனுக்குக்கூட சிறிய தீங்கினை விளைவிக்கக்கூடிய யோசனையிலும், பிறதீய எண்ணங்களிலும், சிந்தனையைச் செலுத்த நேரமிராதென்பதை நினைவாய், நினைவாய். 155

ஏகதேசம் ஒருவனுடைய சுவல்ப, சுவல்ப பொருளுக்கு நஷ்டமும், சின்ன சின்ன காரியங்களால் மனக்கஷ்டமுங் கொடுக்கா திருப்பதிலொருகால் தவறினும் சாஸ்வதமான பழி பாவம், இராஜதண்டனை, அவமானம், ஊரார் சாபம் முதலியன தாத்தக்க பொருள் நஷ்ட

மும் மனத்திற்குக் கஷ்டமும் உண்டாகாத வழியே யெல்லாவற்றிலும் உத்தமமான வழி யென்றோர்ந்து நடப்பதே யித்துவரையி லுனக் கெடுத்துறுத்தியவைகளை யுணர்ந்ததின் பெரும்பயனுமென்று பரமேசன் திருவருளைப் பரவிப் பணிவாய், பணிவாய். 153

"என்மொழிக் கிரங்கி யிருசெவி யளித்த
நன்மன மேயெந் நாளுநீ வாழி."

மனத்திற்குறுத்து மதிவிளக்கம்

சம்பூர்ணம்.

---

இப்புத்தகம் கிடைக்கும் இடங்கள்.

"லோகோபகாரி" ஆபீஸ்,
கோமளேசுவரன்பேட்டை, சென்னை.

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புஸ்தகசாலை,
31 தங்கசாலை வீதி (பார்க்டவுன்) சென்னை.

ரிப்பன் பிரஸ், தம்புசெட்டி வீதி, சென்னை.

கலாரத்நாகரம் பிரஸ், தம்புசெட்டி வீதி,
சென்னை.